இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்) பக்கம் 3

திருக்குர்ஆனின் உண்மையை ஆதரிக்கும் நவீன அறிவியல் கண்டுபிடிப்புகள் பக்கம் 6

பராஹீனே அஹ்மதிய்யா (தொகுதி 1, 2) பக்கம் 15

எஸ்ஸன்ஸ் ஆஃப் இஸ்லாம் ‘தூய நபி முஹம்மத் (ஸல்) அவர்கள்’ (தொடர்-7) பக்கம் 19


மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil


Nubuwwat Vazhi | October 2025 | Vol. 4 - Issue No. 11



Ahmadiyya Muslim Jama’at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311




**இது (குர்ஆன்) எல்லா மனிதர்களுக்கும் நேர்வழி காட்டக்கூடியதாக (அனுப்பப்பட்டு) உள்ளது. அது தெளிவான சான்றுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.**

(திருக்குர்ஆன் 2:186)



# திருக்குர்ஆன்

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِذَا نُوْدِيَ لِلصَّلٰوةِ
مِنْ يَّوْمِ الْجُمُعَةِ فَاسْعَوْا اِلٰى ذِكْرِ اللّٰهِ
وَذَرُوا الْبَيْعَ ۗ ذٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ
تَعْلَمُوْنَ

நம்பிக்கை கொண்டவர்களே! வெள்ளிக்கிழமையில் தொழுகைக்காக அழைக்கப்பட்டால், நீங்கள் அல்லாஹ்வை நினைவு கூருவதற்கு விரைந்து செல்லுங்கள். (மற்றெல்லா) வியாபாரங்களையும் விட்டு விடுங்கள். நீங்கள் அறிந்திருப்பின் இது உங்களுக்கு மிகச் சிறந்ததாகும். (62:10)



# ஹதீஸ்

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم
ذَكَرَ يَوْمَ الْجُمُعَةِ فَقَالَ " فِيهِ سَاعَةٌ لاَ يُوَافِقُهَا عَبْدٌ
مُسْلِمٌ، وَهْوَ قَائِمٌ يُصَلِّي، يَسْأَلُ اللَّهَ تَعَالَى شَيْئًا
إِلاَّ أَعْطَاهُ إِيَّاهُ ". وَأَشَارَ بِيَدِهِ يُقَلِّلُهَا.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின் –றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வெள்ளிக்கிழமையில் ஒரு நேரம் வருகிறது. அதில் அடியான் தொழுகையில் நிற்கும் பொழுது இந்த நேரத்தை எதிர்கொண்டால் அப்போது அவன் எதை வேண்டினாலும் அல்லாஹ் அதனை நிச்சயமாக வழங்கி விடுவான். பின்னர் அவர்கள் அது எவ்வளவு சிறிய நேரம் என்பதை தமது கையினால் சைகை செய்து காண்பித்தார்கள். (புகாரி ஹதீஸ் எண் 935)

# இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்)



## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)

✧✧✧ தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A. ✧✧✧

### முன்னுரை

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 1900-ஆம் ஆண்டு ஜுலை மாதம் 20-ஆம் தேதி அன்று உண்மையையும், பொய்யையும் பிரித்தறிவதற்காக லாஹூரில் ஒரு மாநாட்டை நடத்தி, சீட்டு குலுக்கிப் போட்டு எடுத்து திருக்குர்ஆனிலிருந்து ஏதாவதொரு ஒரு சூராவை எடுத்து துஆவிற்குப் பிறகு நாற்பது வசனங்களின் உண்மைகளையும், இறைஞானங்களையும் சொற்செறிவுள்ள, கருத்துச் செறிவுள்ள அரபி மொழியில் ஏழு மணி நேரத்துக்குள் எழுதுவதற்கு பொதுவாக அனைத்து ஆலிம்களுக்கும், குறிப்பாக கோல்டவிய்யாவைச் சேர்ந்த பீர் மஹர் அலி சாஹிப் அவர்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தார்கள். ஆனால் எவரும் இந்த அறைகூவலை ஏற்றுக் கொள்ளவில்லை. பீர் மஹர் அலி சாஹிப் அவர்களும் அற்புதத்தைக் காட்டும் போட்டியை அதாவது திருக்குர்ஆன் வசனங்களின் சொற்செறிவுள்ள, கருத்துச் செறிவுள்ள அரபி மொழியில் த∴ப்ஸீர் (விளக்கவுரை) எழுதுவதற்கான அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் (பீர் மஹர் அலி சாஹிப்) தகவல் கொடுக்காமல் அவராகவே லாஹூர் சென்றடைந்து, விவாதற்கான நிபந்தனைகளை விதித்து போட்டியாக த∴ப்ஸீர் (விளக்கவுரை) எழுதுவதற்கு ஆயத்தமாக இருக்கிறேன் என்ற ஏமாற்றத்தை அவர் மக்களுக்குக் கொடுத்திருந்தார்.

அவருடைய முரீதுகள் (சீடர்கள்) எல்லா இடத்திலும் அவர்களின் பொய்யான வெற்றியைப் பற்றி தம்பட்டம் அடித்தபோது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அசிங்கமாக ஏசிப் பேசியபோது, பீர் (மஹர் அலி) சாஹிப் உண்மையான உள்ளத்துடன் போட்டியாக த∴ப்ஸீர் எழுதுவதற்கு ஆயத்தமாகி விட்டார் என்றும், இந்த நிய்யத்திலேயே அவர் லாஹூர் சென்றிருந்தார் என்றும், ஆனால் அழைப்பு விடுத்தவரே லாஹூர் வரவில்லை; வெருண்டோடி விட்டார் என்றும் பரப்பியபோது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 15, டிசம்பர் 1900 அன்று வெளியிட்ட தமது பிரசுரத்தில் அர்பயீன் நூல் எண் 4-ல், இறைவன் அவர்களின் உள்ளத்தில் இட்டதற்கேற்ப த∴ப்ஸீர் எழுதுவதற்கு இன்னொரு திட்டத்தை எடுத்து வைத்தார்கள். அன்னார் (அலை) இவ்வாறு கூறினார்கள்:

“பீர் ஜீ சாஹிப் அவர்கள் உண்மையில் சொற்செறிவுள்ள அரபு மொழியில் த∴ப்ஸீர் எழுதுவதற்கு ஆற்றல் உள்ளவர் என்றால், அவர் எந்த ஏமாற்றத்தையும் செய்யவில்லை என்றால், அதே ஆற்றல் அவர்களிடம் இப்போதும் கண்டிப்பாக இருக்கும். எனவே அவருக்கு இறைவன் மீது சத்தியம் செய்து கூறுகிறேன். எனது வேண்டுகோளை இவ்விதமாக நிறைவேற்றட்டும். அதாவது



எனது வாதங்களைப் பொய்ப்படுத்துவது தொடர்பாக சூரா ∴பாத்திஹாவுக்கான த∴ப்ஸீரை சொற்செறிவுள்ள, கருத்துச் செறிவுள்ள அரபு மொழியில் எழுதட்டும். அது நான்கு பாகங்களை விடக் குறைவாக இருக்கக் கூடாது.

மேலும் நான் அதே சூராவுக்கான விளக்கவுரையை அல்லாஹ்வின் அருளினாலும், அவனது ஆற்றலினாலும் எனது வாதத்திற்கான சான்று தொடர்பாக சொற்செறிவுள்ள, கருத்துச் செறிவுள்ள அரபு மொழியில் எழுதுவேன். அவர் எனது இந்தத் த∴ப்ஸீருக்குப் போட்டியாக த∴ப்ஸீர் எழுதுவதில் உலகிலுள்ள எல்லா ஆலிம்களிடமிருந்தும் உதவியை

வாங்கிக் கொள்வதற்கு அவருக்கு அனுமதி இருக்கிறது. அரபு மொழியின் சொல்வன்மை மிக்கவர்களையும், கருத்துச் செறிவுள்ள நாவன்மை மிக்கவர்களையும் அவர் அழைத்துக் கொள்ளட்டும். லாஹூர் மற்றும் மற்ற நாடுகளில் உள்ள அரபு மொழியில் புலமை பெற்ற பேராசிரியர்களையும் உதவிக்காக அழைத்துக் கொள்ளட்டும்.

1900 டிசம்பர் 15-ஆம் தேதியிலிருந்து எழுபது நாட்கள் வரை இந்த வேலைக்காக நம் இருவருக்கும் காலக்கெடு ஆகும். ஒரு நாள் கூட அதிகமாக இருக்கக் கூடாது. போட்டியாக தஃப்ஸீர் எழுதியதற்குப் பிறகு அரபு நாட்டைச் சேர்ந்த மூன்று பெயர்பெற்ற இலக்கிய அறிஞர்கள் அவருடைய தஃப்ஸீரை சொற்செறிவையும், கருத்துச் செறிவையும் ஒருங்கே கொண்ட தொகுப்பு என்று குறிப்பிட்டு விட்டால், ஞானங்களால் நிரம்பியதாகக் கருதினால், நான் 500 ரூபாய் அவருக்குக் கொடுப்பேன். (500 ரூபாய் என்று இங்கு குறிப்பிட்டிருப்பது 1900-ஆம் ஆண்டில் ஆகும்-மொழிபெயர்ப்பாளர்). மேலும் நான் எனது எல்லா நூல்களையும் எரித்து விடுவேன். மேலும் நான் அவரது கையில் பைஅத் செய்து விடுவேன். மேலும் தீர்ப்பு நேர் எதிராக இருந்தால், அல்லது அந்த கால வரையறைக்குள் அதாவது 70 நாட்களுக்குள் அவர் எதையும் எழுத முடியவில்லை என்றால், அப்படிப்பட்டவர்களிடமிருந்து பைஅத் வாங்குவதற்கு எனக்கு எந்தத் தேவையு-மில்லை. பணத்திற்கான ஆசையும் இல்லை. அவர் பீர் என்று அழைக்கப்பட்டு எவ்வாறு வெட்கத்திற்குரிய பொய்யைக் கூறினார் என்பதை மட்டுமே காட்டுவேன்." (நூல்: அர்பயீன் எண்: 4 ரூஹானீ கஸாயின் தொகுதி 17 அடிக்குறிப்பு பக்கம் 449, 450 காண்க).




மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

“அவர் சந்தேகமின்றி, தனது உதவிக்காக பட்டாலாவைச் சேர்ந்த மவ்லவி முஹம்மது ஹுஸைன், மவ்லவி அப்துல் ஜப்பார் கஸ்னவி, பீன் ஊரைச் சேர்ந்த முஹம்மது ஹஸன் ஆகியோரை அழைத்துக் கொள்வதற்கும் நாம் அவருக்கு அனுமதி அளிக்கிறோம். இன்னும் கூறுவதென்றால், கொஞ்சம் பேராசை கொடுத்து இரண்டு, நான்கு அரபு மொழி இலக்கிய அறிஞர்களையும் வேண்டிக் கொள்வதற்கும் அவருக்கு அதிகாரம் இருக்கிறது. இரு பிரிவினரின் தஃப்ஸீர் நான்கு பாகங்களை விட குறைவாக இருக்கக் கூடாது............... மேலும் நியமிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் அதாவது 1900 டிசம்பர் 15-ஆம் தேதியிலிருந்து 1901 பிப்ரவரி 25-ஆம் தேதி வரை 70 நாட்கள் இரு பிரிவினரில் எந்த பிரிவினரும் ஃபாத்திஹாவின் தஃப்ஸீரை அச்சிட்டு வெளியிடாவிட்டால், இந்த நாள்கள் கடந்து சென்று விட்டால், அவர் பொய்யர் எனக் கருதப்படுவார். அவர் பொய்யர் என்பதற்கு வேறு எந்த சான்றிற்கான தேவையிருக்காது.” (நூல்: அர்பயீன் எண்: 4 ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 484)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நியமிக்கப்பட்ட காலக்கெடுவுக்கு ஏற்ப தஃப்ஸீரை எழுதி, வெளியிட்டு விட்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஞானங்களால் நிரம்பிய இந்த தஃப்ஸீரின் பெயர் ‘இஃஜாஸுல் மஸீஹ்’ (மஸீஹின் அற்புதம்) என்பதாகும். சகோதரர்கள் பயன் பெறுவதற்காக இந்த அற்புதமான கருத்துகளைக் கொண்ட நூலின் தமிழாக்கம் எடுத்து வைக்கப்படுகின்றது.

## உருது நூலின் அட்டைப் படத்திலுள்ள அரபு வாசகங்களின் தமிழாக்கம்

எவர் சூரா ஃபாத்திஹாவை அதன் மறைமுகமான ஞானங்கள் மற்றும் ஆன்மிக உண்மைகளுடன் படிக்க விரும்புகிறாரோ, அவர் நமது இந்த தஃப்ஸீரை சிந்தனையுடனும், நல்ல நிய்யத்துடனும் படிக்க வேண்டும். மேலும் போட்டிக்காக ஆயத்தமாகி விடக் கூடாது. ஏனெனில் இது விடையளிக்க முடியாத ஒரு நூலாகும். மேலும் எவர் இந்த நூலுக்கு விடை எழுத ஆயத்தமாவாரோ, வீராப்பு காட்டுவாரோ அவர் இந்த வேலையில் தான் விரைவில் தோல்வி அடைந்தார் என்பதையும், தனது நஃப்ஸை பழித்துரைப்பவர் ஆனார் என்பதையும் காண்பார். மேலும் வெட்கமடைவார். எனவே நமது தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்களில் இருந்து தனது மடியை நிரப்பிக் கொள்கின்றவர், அதைப் பெறுகின்றவர் அருளுக்குரியவர் ஆவார். அவர் வெட்கமற்ற ஆடையை அணிந்தவரையும், உண்மையின் ஆடையை கழற்றி எறிந்தவரையும் போன்றவராக ஆக மாட்டார். இந்த நூல் நம்மை அறிவீனர் என்று கூறுபவர்களுக்கும், ஏமாற்றத்தை அழகுபடுத்திக் காட்டுபவர்களுக்கும் இவர்களிடம் எதுவும் இல்லை. மாறாக, வறியவர்களின் கூட்டமாகும் என்று கூறுகின்றவர்களுக்கும் மறுப்பாக இருக்கிறது. ஆயினும் நமது எல்லா நூல்களும் கம்பீரமான இறைவனின் ஆதரவினாலேயே ஆகும் என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். இல்லையென்றால், நாம் அறியாதவர்களைப் போன்றவர்களே ஆவோம். எனது இந்த நூல் மிகவும் சொற்செறிவுள்ள, கருத்துச் செறிவுள்ள அருமையான நூல் ஆகும். மேலும் நான் இதற்கு,

اعجاز المسيح

(இஃஜாஸுல் மஸீஹ்)

என்று பெயர் வைத்திருக்கிறேன். இந்த நூல் ரமலான் மாதம் ஹிஜ்ரி 1318-ஆம் வருடம் 1901-ஆம் ஆண்டு பிப்ரவரி 20-ஆம் தேதியின் தொடக்கத்திலிருந்து எழுபது நாட்களில் ஆயத்தமாகி ஸியாவுல் இஸ்லாம் அச்சகத்தில் வெளியானது. வெளியிட்ட இடம் காதியான். குர்தாஸ்பூர். பேராவைச் சேர்ந்த

ஹக்கீம் ∴பஸ்ல் தீன் என்பவரின் ஏற்பாட்டில் வெளியிடப்பட்டது.

## அறிவிப்பு

உருதுவில் பொதுவான தகவலுக்காக எழுதப்படுவது என்னவென்றால், இறைவன் 70 நாட்களுக்குள் 1901-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ஆம் தேதி இந்த நூலை அவன் தனது அருளினாலும், கருணையினாலும் நிறைவு செய்து விட்டான். இவையெல்லாம் அவனது அருளால் நடந்தது என்பதே உண்மையாகும். இந்த நாட்களில் இந்த எளியவன் பலவகையான நோய்களுக்கும், கஷ்டங்களுக்கும் உள்ளானேன். அதனால் இந்த வேலை முழுமையடையாமல் போய் விடுமோ என்ற கவலையும் ஏற்பட்டது. ஏனெனில் ஒவ்வொரு நாளும் பலவீனத்தாலும், நோயின் தாக்குதலினாலும் எழுதுகோலை எடுப்பதற்கு உடல் நலம் தகுதியற்றதாக இருந்தது. உடல் நலம் இருந்தாலும், என்னிடம் என்ன தகுதி இருந்தது?

من آنم کہ من دانم

(மன் ஆனம் கெ மன் தானம்)

இந்த பாரசிக பழமொழியின் பொருள்: (நான் யார் என்பதை நான்தான் நன்றாக அறிந்தவனாவேன். ஆனால் இது எனது மூளையின் ஆற்றலின் விளைவு ஆகும் என்று இந்த இடத்தில் எனது நண்பர்களாக இருக்கின்றவர்களும் கூட நினைக்க வேண்டாம் என்பதுதான் இந்த உடல் நோய்களுக்கான இரகசியமாகும் என்று எனக்கு இறுதியில் தெரிந்தது.

எனவே அந்த உடல் நலக் குறைவுகள் மற்றும் தடைகளின் மூலமாக இது எனது உள்ளத்தின், மூளையின் வேலை அல்ல என்பதை அவன் நிரூபித்துக் காட்டி விட்டான். இது இந்த மனிதரின் வேலை அல்ல; வேறு யாரோ ஒருவர் மறைமுகமாக இவருக்கு உதவி செய்கிறார் என்ற எண்ணத்தில் எனது எதிரிகள் முற்றிலும் உண்மையில் இருக்கின்றனர். உண்மையில் எனக்கு உதவி செய்பவன் வேறு ஒருவன் ஆவான் என்று நான் சாட்சி கூறுகிறேன். ஆனால் அவன் மனிதன் அல்லன் எவனுடைய மடியில் எமது தலை இருக்கின்றதோ அவன் ஆற்றல் மிக்கவனும், வல்லமை மிக்கவனும் ஆகிய அந்த இறைவனே ஆவான். அற்புதங்களின் ஆற்றல் இருக்கும் அத்தகைய வேலைகளில் வேறு யாராவதும் உதவி செய்ய முடியும் என்றால், பின்னர் அந்த சூழ்நிலையில், இந்த நூலுடன் இதைப் போன்று இதே 70 நாட்களில் எனது நிபந்தனைக்கேற்ப சூரா ∴பாத்திஹாவுக்கு நூற்றுக்கணக்கான வேறு த∴ப்ஸீர்கள் வெளியிடப்படவிருக்கின்றன என்றும், அல்லது வெளியிடப்பட்டு விட்டன என்றும் பார்வையாளர்கள் நம்பிக்கை வைக்க வேண்டும். ஏனெனில் அந்த அடிப்படையிலேயே தீர்ப்பு வைக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, சய்யிது மஹர் அலி ஷாஹ் சாஹிப் அவர்கள் இப்போது த∴ப்ஸீர் எழுதுவதற்காக கொஞ்சம் கண்டிப்பாக முயற்சி செய்திருப்பார்கள் என்று உறுதி கொள்கிறோம். இல்லையென்றால், அவர்கள் தாம், த∴ப்ஸீர் எழுதுவதற்காக லாஹூர் வந்திருந்ததாக எந்த மக்களுக்கு முன்னால் கூறப்பட்டிருந்ததோ அவர்களுக்கு முன்னால் அவர் இனி எப்படி முகத்தைக் காட்ட முடியும்? அவர் 70 நாட்களில் எழுதவில்லையென்றால், ஏழு மணி நேரத்தில் அவர் என்ன எழுத முடியும்? என்பது வெளிப்படை.

சுருக்கமாக, நீதியாளர்கள் இறைவனின் ஆதரவைப் பார்ப்பதற்கு இது ஒரு மகத்தான அடையாளம் ஆகும். ஏனெனில் எழுபது நாட்கள் காலக்கெடுவை விதித்து நூற்றுக்கணக்கான மவ்லவிமார்கள் போட்டிக்கு அழைக்கப் -பட்டனர். இப்போது அவர்களின் விடை என்ன? அவர்கள் ஏன் அப்படிப்பட்ட த∴ப்ஸீரை வெளியிட முடியவில்லை? அற்புதம் என்பது இதுதானே! பின்னர் அற்புதம் என்பது என்ன?

### அடுத்து சில உருது கவிதைகள் இருக்கின்றன.

اے دوستو جو پڑھتے ہو اُمُّ الکتاب کو  اب دیکھو میری آنکھوں سے اس آفتاب کو

سوچو دعاء فاتحہ کو پڑھ کے بار با  کرتی ہے یہ تمام حقیقت کو آشکار

دیکھو خدا نے تم کو بتائی دعا یہی  اس کے حبیب نے بھی پڑھائی دعا یہی

پڑھتے ہو پنج وقت اسی کو نماز میں  جاتے ہو اِس کی راہ سے درِ بے نیاز میں

اس کی قسم کہ جس نے یہ سورت اُتاری ہے  اس پاک دل پہ جس کی وہ صورت پیاری ہے

یہ میرے رب سے میرے لئے اک گواہ ہے  یہ میرے صدق دعویٰ پہ مہرِ الٰہ ہے

میرے مسیح ہونے پہ یہ اک دلیل ہے  میرے لئے یہ شاہدِ ربِّ جلیل ہے

پھر میرے بعد اوروں کی ہے انتظار کیا؟  توبہ کرو کہ جینے کا اعتبار کیا

### அவற்றின் பொருள்:

உம்முல் கிதாப் (வேதங்களின் தாய் என்ற சூரா ∴பாத்திஹா)-ஐ படிக்கின்ற நண்பர்களே! இப்போது எனது கண்களால் அந்த சூரியனைப் பாருங்கள்.

∴பாத்திஹா எனும் துஆவை மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்து சிந்தியுங்கள். இது எல்லா உண்மைகளையும் திறந்து காட்டி விடுகிறது.

பாருங்கள்! இதுதான் இறைவன் உங்களுக்குக் கூறிய துஆ ஆகும். அவனை நேசிப்பவரும் (ஸல்) இந்த துஆவைத்தான் கற்றுக் கொடுத்தார்கள்.

நீங்கள் ஐந்து வேளையிலும் தொழுகையில் இதையே ஓதுகின்றீர்கள். தன்னிறைவு பெற்றவனின் சந்நிதியில் (சூரா ∴பாத்திஹா ஆகிய) இதன் வழியின் மூலமாகவே செல்கின்றீர்கள்.

எவருக்கு அந்த சூரா அன்பிற்குரியதாக இருந்ததோ அத்தகைய தூய உள்ளத்தில் எவன் இந்த சூராவை இறக்கினானோ அவன் மீது ஆணையாக!

இது எனது இறைவனிடமிருந்து எனக்கான ஒரு சாட்சி ஆகும். இது எனது வாதத்தின் உண்மைக்கு வணக்கத்திற்குரியவனின் முத்திரை ஆகும்.

நான் மஸீஹாக இருக்கிறேன் என்பதற்கு இது ஒரு சான்று ஆகும். இது கம்பீரமான எனது இறைவனிடமிருந்து எனக்கு ஒரு சாட்சி ஆகும்.

பின்னர் எனக்குப் பிறகு மற்றவர்களை என்ன எதிர்பார்க் -கின்றீர்கள்? பாவமன்னிப்புத் தேடுங்கள். உயிர் வாழ்வது பற்றி என்ன நம்பிக்கை வைக்க முடியும்?

எளியவன்
மிர்ஸா குலாம் அஹ்மது
காதியான்
20, பிப்ரவரி 1901

(தொடரும்...)

# திருக்குர்ஆனின் உண்மையை ஆதரிக்கும் நவீன அறிவியல் கண்டுபிடிப்புகள்




**மதிப்பிற்குரிய டாக்டர் ஸாஹித் அஹ்மத் கான் சாஹிப்**

(Sadr Qadha Board, UK)

*தமிழாக்கம்: N. முபாரக் அஹ்மத்*


هُوَ الَّذِيْٓ اَرْسَلَ رَسُوْلَهٗ بِالْهُدٰى وَدِيْنِ الْحَقِّ لِيُظْهِرَهٗ عَلَى الدِّيْنِ كُلِّهٖ ۗ وَكَفٰى بِاللّٰهِ شَهِيْدًا ۗ

அவனே தன் தூதரை நேர்வழியுடனும், உண்மையான மார்க்கத்துடனும், இதனை அவன் ஒவ்வொரு மார்க்கத்தை -யும் வெற்றி பெறச் செய்வதற்காக அனுப்பினான். அல்லாஹ்வே போதுமான சாட்சியாக இருக்கிறான். (48:29)

நமது ஜல்ஸா ஸாலானாவின் மையப்புள்ளி என்பது நமது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஈமானை ஈர்க்கும் சொற்பொழிவுகள் ஆகும். அவை முழு ஞானம் நிறைந்தவையும் முழு உலகிற்கும் வழிகாட்டுதல் வழங்குபவையுமாகும். எங்கள் அன்பான இமாம் இந்த ஆண்டின் யு.கே ஜல்ஸாவிற்கு ஒரு Theme-ஐ நிர்ணயித் -துள்ளார்கள், அதாவது, 'திருக்குர்ஆன் மனிதகுலத்திற்கான ஓர் உயிருள்ள வழிகாட்டி' என்பதாகும்.

உலகம் பல சவால்களைக் கடந்து செல்கிறது என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. முன்பை விட இப்போது உலகத்திற்கு ஒரு வழிகாட்டுதல் தேவையாக உள்ளது. தனித்துவமான மற்றும் எல்லாருக்கும் பொதுவான, எந்த மாற்றத்திற்கும் உள்ளாகாத அந்த வழிகாட்டுதல் நிச்சமயாக இருக்கின்றது. அது மனிதகுலம் எதிர்கொள்ளும் பிரச்சினை -களைத் தீர்க்கும் திறவுகோலை வைத்திருக்கும் நூல் ஆகும். அது இவ்வாறு அறிவிக்கின்றது:

هُدًى لِّلنَّاسِ وَبَيِّنٰتٍ مِّنَ الْهُدٰى وَالْفُرْقَانِ ۚ

இது (குர்ஆன்) எல்லா மனிதர்களுக்கும் நேர்வழி காட்டக்கூடியதாக அனுப்பப்பட்டு உள்ளது. அது தெளிவான சான்றுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. (2:186)

துரதிஷ்டவசமாக, திருக்குர்ஆனின் உண்மையை நம்பாதவர்களும் இருக்கிறார்கள். மற்றுஞ்சிலர் அதில் நம்பிக்கை கொண்டிருந்த போதிலும் அதை ஒதுக்கியே வைத்திருக்கின்றார்கள். அதை இந்தக் காலத்தின் வழிகாட்டுதலுக்காக அவர்கள் நாடவில்லை.

சில அறிவிலிகள் திருக்குர்ஆனின் நகல்களை எரிக்கிறார்கள். அவ்வாறு செய்வதால் அதன் தூதுச்செய்தி தொலைந்து விடும் என்று நினைக்கிறார்கள்! அது ஒருபோதும் நடக்காது. அதற்கு அல்லாஹ்வே உத்தரவாதம் அளித்துள்ளான்.

நிச்சயமாக இந்த குர்ஆனாகிய அறிவுரையை நாமே இறக்கினோம். நிச்சயமாக நாமே இதனை பாதுகாப்போம். (15:10)




அரேபியாவின் பாலைவனங்களில் வசிக்கும் ஓர் எழுத்தறிவற்ற மனிதருக்கு இறக்கப்பட்ட ஒரு நூல், தற்போதைய ஒளிமயமான உலகிற்கு வழிகாட்டும் திறவுகோல்களை எவ்வாறு வைத்திருக்க முடியும் என்று சிலர் வாதிடுகின்றனர்?

திருக்குர்ஆனின் அழகு, இதுவரை உலகம் முழுவதும் அறியாத கடந்தகால நிகழ்வுகளை வெளிப்படுத்துவது மட்டுமல்ல. குர்ஆனின் ஒவ்வோர் கூற்றுக்கும் எதிர்காலம் சாட்சியமளிக்கும் என்று முன்னறிவிக்கிறது.

திருக்குர்ஆன் ஒரு பொக்கிஷம் ஆகும். ஆனால் அதை அறிந்தவர்கள் வெகுசிலரே என வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குர்ஆனை இவ்வாறு விவரிப்பதில் எந்த ஆச்சரியமில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 344)

அந்தப் பொக்கிஷங்கள் என்ன என்பதை அவர்களே விளக்குகிறார்கள்:

திருக்குர்ஆனின் தெளிவான அற்புதம், ஒவ்வொரு மக்களுக்கும் தன்னை வெளிப்படுத்தி, இந்தியராக இருந்தாலும் சரி, பாரசீகராக இருந்தாலும் சரி, ஐரோப்பியராக இருந்தாலும் சரி, அமெரிக்கராக இருந்தாலும் சரி, அனைவரையும் மௌனமாக்கக் கூடியதாக உள்ளது. இது, ஒவ்வொரு காலகட்டத்திலும் அதன் தேவைக்கேற்ப விளக்கப்பட்டு, ஒவ்வொரு யுகத்தின் சிந்தனையையும் முறியடிக்க

ஆயுதமேந்திய படைவீரர்களாக நிற்கும் நுண்ணறிவு மற்றும் உண்மைகளின் முடிவில்லா கருவூலமாகும்.

திருக்குர்ஆனின் உண்மையை அறிவியல் அணுகு-முறையின் மூலம் நிரூபிக்கும்படி நான் பணிக்கப்பட்டுள்ளேன். நவீன அறிவியல் கண்டுபிடிப்புகள் 14 நூற்றாண்டுகளுக்கு முன்பு திருக்குர்ஆனில் கூறப்பட்ட கூற்றுகளை எவ்வாறு ஆதரிக்கின்றன என்பதைக் காட்ட, இன்றைய அறிவொளி யுகம் கோட்பாடு அல்லது தூய தர்க்கத்தை விட அதிகமாக அனுபவ ஆதாரத்தைக் கோருகிறது. அதற்கு அறிவியல் ஆதாரம் தேவைப்படுகிறது. இது கணக்கீடுகள் மற்றும் மதிப்பீடுகளின் அடிப்படையில் ஆதாரங்களை அடிப்படை-யாகக் கொண்டது. திருக்குர்ஆன் ஒரு மத நூல்தானே. அறிவியலின் தொகுப்பு அல்ல என்று நீங்கள் கேள்வி எழுப்பலாம். அப்படியும் இருக்கலாம். ஆனால் இருப்பினும் ஓர் தொடர்பு உள்ளது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த உறவை அழகாக விளக்குகின்றார்கள்:

அவர்கள் கூறுகின்றார்கள். திருக்குர்ஆன் இறைவனின் சொல்லாகும். விஞ்ஞானம் இறைவனின் செயலாகும். ஆச்சரியப்படும் விதமாக திருக்குர்ஆன் அண்டவியல்



(Cosmology), வானியற்பியல் (Astrophysics), புவியியல் (Geology), கருவியல் (Embroyology), தொல்லியல் (Archaelogy) போன்ற துறைகள் தொடர்பான உண்மைகளால் நிறைந்துள்ளது. நேரத்தை கருத்தில் கொண்டு எந்த அறிவியல் கண்டுபிடிப்புகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வது எதை விட்டு விடுவது என்பது எனக்கு சவாலாக இருக்கின்றது.

நான் விஞ்ஞானி அல்ல. அதிலிருந்து வெகு தொலைவில் நான் இங்கே நின்று உங்களுக்கு அறிவியல் பற்றி விரிவுரை வழங்கப் போவதில்லை என்பதில் உறுதியாக இருங்கள்! உங்களில் பலரைப் போலவே நானும் வல்ல அல்லாஹ்வின் படைப்பைப் பற்றி சிந்திக்கிறேன். அந்தப் படைப்பின் முழுமை பற்றி சிந்திக்கின்றேன்.

திருக்குர்ஆன் கூறுகின்றது:

هَلۡ تَرٰی مِنۡ فُطُوۡرٍ

படைப்பில் ஏதேனும் குறைபாட்டைக் கண்டுபிடிக்க மனிதனுக்கு சவால் விடுகிறது. (67:4)

நோபல் பரிசைப் பெற்ற பேராசிரியர் அப்துஸ் ஸலாம் சாஹிப், பிரபஞ்சத்தின் முழுமை இயற்பியலாளர்-களுக்கு திகைப்பூட்டும் என்று கூறினார்கள். பேராசிரியர் ஸலாம் அவர்கள் தனது அறிவியல் பணியில் எப்பொதெல்லாம் ஒரு சிக்கலை எதிர்கொண்டார்களோ அப்போதெல்லாம், வழிகாட்டுதலுக்காகவும் தீர்வுக்காகவும் அவர்கள் திருக்குர்ஆனை நாடுவார்கள் என்பது பதிவு செய்யப்பட்டுள்ளது

நமது கிரகங்களின் துல்லியமான இடம், சரியான தூரம், நிறை மற்றும் ஈர்ப்பு ஆகியவை பிரபஞ்சத்தின் சரியான வரிசைக்குக் காரணம் என்று குர்ஆன் கூறுகிறது என்று அறிவியல் கணக்கீடுகள் காட்டுகின்றன. இதனை திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது:

அல்லஸீ கலக்க ஸப்அ ஸமாவாத்தின் தபாக்கன் - அவனே ஏழு வானங்களையும் அடுக்கடுக்காகப் படைத்துள்ளான்.

இந்த அடையாளங்கள் வானத்தோடு மட்டும் முடிவடையவில்லை. மாறாக நம்மைச் சுற்றிலும் இருக்கின்றன.

அல்லாஹ் சூரா ஹாமீம் ஸஜ்தா வசனம் 54-ல் கூறுகின்றான்.

سَنُرِیۡہِمۡ اٰیٰتِنَا فِی الۡاٰفَاقِ وَ فِیۡۤ اَنۡفُسِہِمۡ حَتّٰی یَتَبَیَّنَ لَہُمۡ اَنَّہُ الۡحَقُّ

இது உண்மையானதே என்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும் வரை, நாம் எம் அடையாளங்களை அடிவானங்களிலும், அவர்களுக்கிடையிலும் விரைவில் காட்டுவோம்.

திருக்குர்ஆனின் உண்மை பூமியில் உள்ள விஷயங்களிலும், பிரபஞ்சத்தில் உள்ள விஷயங்களிலும் வெளிப்படும் என்று அல்லாஹ் இங்கு வாக்குறுதி அளித்துள்ளான்.

நீங்கள் இரவில் வானத்தைப் பார்க்கும்போது, உங்கள் சாதாரண கண்ணால் நட்சத்திரங்கள், நிலவு, இன்னும் சில கிரகங்களைப் பார்க்கிறீர்கள். இதெல்லாம் எப்படி வந்தது என்ற எண்ணம் உங்கள் மனதில் எழுகிறது. இந்தப் படைப்பு தொடங்குவதற்கு என்ன நடந்தது?

اِنَّ فِیۡ خَلۡقِ السَّمٰوٰتِ وَ الۡاَرۡضِ وَ اخۡتِلَافِ الَّیۡلِ وَ النَّہَارِ لَاٰیٰتٍ لِّاُولِی الۡاَلۡبَابِ

வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும், இரவும் பகலும் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு நிச்சயமாக பல அடையாளங்கள் உள்ளன. (3:191)

எவர்கள் அல்லாஹ்வை நின்றும், உட்கார்ந்தும், படுத்தும் நினைவுகூர்ந்து, வானங்கள் மற்றும் பூமியின் படைப்பைப ' பற்றிச் சிந்திப்பார்களோ அவர்கள் இவ்வாறு கூறுவார்கள்: 'எங்கள் இறைவனே, நீ இதை வீணாகப் படைக்கவில்லை.'

நவீன விஞ்ஞானிகள் பிரபஞ்சத்தின் உருவாக்கத்தின் ஆரம்ப கட்டங்களின் மர்மத்தைக் கண்டுபிடித்துள்ளனர். இது ஒரு ரஷ்ய இயற்பியலாளர் மற்றும் பெல்ஜியம் அண்டவியல் நிபுணரின் கண்டுபிடிப்பாகும். இது ஒரு தொடக்க நிகழ்வையும் பிரபஞ்சத்தின் இயக்கவியலையும் முன்வைத்தது. பின்னர்

1924 ஆம் ஆண்டில் Hubble தனது தொலைநோக்கியுடன், Red Shift Data மற்றும் காஸ்மிக் கதிர்வீச்சைப் பயன்படுத்தி, கருந்துளை மற்றும் பெருவெடிப்பு பற்றி பேசினார். இது பிரபஞ்சத்தின் ஆரம்ப வளர்ச்சியை விவரிக்கும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அறிவியல் கோட்பாடு ஆகும். அவர்கள் கணக்கிடும் ஒரு நிகழ்வு 13.8 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. பிரபஞ்சம் விரிவடைகிறது என்பதை அவர்களும் ஒப்புக் கொள்கிறார்கள்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே குர்ஆன் இந்த செயல்முறையை விவரிக்கிறது என்பது ஆச்சரியமாக இருக்கிறது.

اَوَلَمۡ يَرَ الَّذِيۡنَ كَفَرُوۡۤا اَنَّ السَّمٰوٰتِ وَالۡاَرۡضَ كَانَـتَا رَتۡقًا فَفَتَقۡنٰهُمَا

வானங்களும், பூமியுமாகிய இரண்டும் இறுக்கமாக மூடப்பட்டிருந்தன. பின்னர் நாம் அவற்றைப் பிரித்து திறந்து விட்டோம் என்பதனை நிராகரிப்பவர்கள் காணவில்லையா? (21:31)



திருக்குர்ஆன் இந்த செயல்முறையை வியக்கத்தக்க வகையில் தெளிவான வார்த்தைகளில் விவரிக்கிறது, உதாரணமாக, ரத்கன், அதன் இரண்டு அர்த்தங்களைக் கொண்டுள்ளது. ஒன்று, ஒரே பொருளாக ஒன்றிணைவது மற்றும் இரண்டாவது, முழுமையான இருள். நிச்சயமாக இது ஒரு கருந்துளையின் (Black Hole) தெளிவான விளக்கமாகும். பின்னர் ஃபதக்னா, திடீர் வெடிப்பு, பெருவெடிப்பைக் (Big Bang) குறிக்கிறது இது பிரபஞ்சத்தின் உருவாக்கத்திற்கு வழிவகுத்த நிகழ்வாகும்.

وَالسَّمَآءَ بَنَيۡنٰهَا بِاَيۡٮدٍ وَّاِنَّا لَمُوۡسِعُوۡنَ

நாம் வானங்களை வல்லமையினால் உருவாக்கி-னோம். நிச்சயமாக நாம் விரிவுபடுத்துவதற்கு ஆற்றல் பெற்றுள்ளோம். (51:48)

பிரபஞ்சம் விரிவடைகிறது என்பது விஞ்ஞானிகள் ஒப்புக் கொண்ட மற்றொரு கண்டுபிடிப்பாகும். பிரபஞ்சவியலைப் புரிந்து கொள்பவர்களுக்கு, இந்த நவீன அறிவியல் கண்டுபிடிப்புகள் இப்போது குர்ஆன் கூறியதைச் சரியாக்குகின்றன என்பது புனித குர்ஆனின் உண்மைக்கு சந்தேகத்திற்கு இடமில்லாத சான்றாகும்.

பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஒருமுறை மட்டுமே நடந்த ஒரு நிகழ்வு குறிப்பிடப்பட்டுள்ளது. குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலகின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு நிமிடமும் நடக்கும் மற்றொரு நிகழ்வு, மற்றொரு படைப்பு செயல்முறை குறிப்பிடப்பட்டுள்ளது.

குழந்தையின் உருவாக்கத்தின் ஆரம்ப கட்டங்கள்

குர்ஆன் கரு வளர்ச்சியின் நிலைகளை வரைபடமாக விவரிக்கிறது.

فَخَلَقۡنَا الۡعَلَقَةَ مُضۡغَةً فَخَلَقۡنَا الۡمُضۡغَةَ عِظٰمًا

அந்த ஒட்டுகின்ற பொருளை சதைக்கட்டியாக உருவாக்கினோம். பின்னர் அந்த சதைக்கட்டியை எலும்புகளாக உருவாக்கினோம். (23:15)

திருக்குர்ஆன் இறங்கி ஏறத்தாழ 1000 ஆண்டுகளுக்கு பின்னர் நவீன கருவிகளைப் பயன்படுத்தி விஞ்ஞானிகள் இந்தக் கருத்தை உறுதிப்படுத்தினர். பேராசிரியர் மூர் போன்ற இந்தத் துறையின் முன்னணி விஞ்ஞானிகள், நவீன அறிவியல் கண்டுபிடிப்புகள் இப்போது குர்ஆன் கூறும் கூற்றுகளை ஆதரிக்கின்றன என்பதை வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறார்கள்.

திருக்குர்ஆன் பயன்படுத்தும் சொற்கள் அந்த நிலைகளைத் துல்லியமாக விவரிக்கின்றன.

'ஹலக' என்பதற்கு மூன்று அர்த்தங்கள் உள்ளன. ஓர் அட்டைப்பூச்சி, தொங்கவிடப்பட்ட பொருள் மற்றும் ஓர் இரத்த உறைவு. ஆச்சரியமூட்டும் விதமாக, மூன்றும் உயர் சக்தி கொண்ட தெளிவுத்திறன் கொண்ட Microscope-ல் காணக்கூடிய ஒரு கருவின் மாதிரிகளாகும். Microscope-ன் கீழ் ஓர் அட்டைப்பூச்சியின் படத்தையும் கருவையும் நீங்கள் பார்த்தால், அவை ஒன்றே என்று நீங்கள் கூறுவீர்கள்.

நாம் கேட்க வேண்டிய கேள்வி என்னவென்றால், இந்த நிலைகளை நபி (ஸல்) அவர்கள் எப்படி அறிந்திருக்க முடியும்? Microscope இல்லாதபோது, CT Scan இல்லை. Ultrasound Scan இல்லை. Google Search Engine இல்லை. வெறும் விளக்கங்கள் மட்டுமல்ல, மிகவும் துல்லியமான கிராஃபிக் விவரம்.

எப்பொழுதும்போல, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதை எப்படி விளக்கியிருப்பார்கள் என்பதைப் பார்க்க ஆர்வமாக இருந்தேன். அவர்கள் நிச்சயமாக இதைக் குறிப்பிடுகிறார்கள்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த முக்கியமான நிலைக்குப் பதிலளிக்கிறார்கள்.

"திருக்குர்ஆனின் உண்மை மற்றும் மேன்மைக்கான வெளிப்புற சான்றுகள் நான்கு வகைகளாகும். நான்காவது வகையைப் பற்றி அவர்கள் கூறுகின்றார்கள். கண்ணுக்குத் தெரியாத விஷயங்கள் என்பது ஒரு நபரின் நாவிலிருந்து வரும் விஷயங்களைக் குறிக்கிறது. அந்த நபரின் விளக்கம் அவரது சக்திக்கு அப்பாற்பட்டது என்பது உறுதி. அதாவது, அந்த நபரின் சூழ்நிலைகளுடன் அவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவை அவருக்கு இயல்பானவை அல்ல. கவனிப்பு அல்லது பிரதிபலிப்பு மூலம் பெறப்பட்டிருக்க

முடியாது என்பது தெளிவாகிறது. அவற்றை நன்கு அறிந்த ஒருவரிடமிருந்து அவர் அவற்றைப் பற்றிய அறிவைப் பெற்றிருக்க முடியும் என்று கற்பனை செய்வதும் சாத்தியமில்லை.

திருக்குர்ஆனில் காணப்படும் வேறு சில மறைக்கப்பட்ட உண்மைகளைப் பகிர்ந்து கொள்கிறேன். மேலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த வார்த்தைகளை உங்கள் மனதில் நிலைநிறுத்த விரும்புகிறேன்.

அல்லாஹ் நமக்குப் பரிசளித்த நமது கிரகமான பூமி, குறிப்பிட்டுள்ள பல அம்சங்களைக் கொண்டுள்ளது உதாரணமாக, மலைகளை எடுத்துக் கொள்ளுங்கள். எந்த நிலப்பரப்பிலும் அழகு நிறைந்த ஒன்று. 7 ஆம் நூற்றாண்டில் அரேபியர்கள் பல்வேறு நிகழ்வுகளில் ஆதாரமற்ற நம்பிக்கைகளைக் கொண்டிருந்தனர். உதாரணமாக, மலைகள் வானத்தைத் தாங்கும் தூண்கள் என்றும் பூமி தட்டையானது என்றும் அவர்கள் கருதினர்.

மலைகள் பற்றிய பல புவியியல் உண்மைகளை திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது. وَّالۡجِبَالَ اَوۡتَادًا மலைகளை முளைகளாகவும் ஆக்கவில்லையா? (78:8)

இது, கூடாரம் அமைக்க நீங்கள் பயன்படுத்தும் ஒரு ஆணி, பெரும் பகுதி மண்ணில் பதிந்திருக்கும். மேலும் ஒரு பகுதி மட்டுமே தரைக்கு மேலே தெரியும் என்பதை விவரிக்கிறது. இதே போன்ற முறையில் மலைகள் ஆழமான வேர்களைக் கொண்டுள்ளன. இந்த வேர்கள் 100 கிலோ மீட்டருக்கும் அதிகமான ஆழத்தில் இருப்பதாக நிபுணர்கள் எங்களிடம் கூறுகிறார்கள். மேலும் அவை கழுமரம் அதாவது ஒரு முளை என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றன. திருக்குர்ஆன் குறிப்பிடும் இந்த வேர்களுக்கு ஒரு குறிப்பிட்ட பங்கு உண்டு.

وَجَعَلۡنَا فِى الۡاَرۡضِ رَوَاسِىَ اَنۡ تَمِيۡدَ بِهِمۡ

பூமி அவர்களுடன் நிலைகுலைந்து விழாமல், அவர்களைத் தாங்கி நிற்பதற்காக நாம் அதில் மலைகளை அமைத்தோம். (21:32)

நவீன அறிவியல் கண்டுபிடிப்புகள் மலைகளின் பங்கை விவரிக்கின்றன. அவற்றின் வேர்களைக் கொண்டு அவை பூமியின் மேலோட்டத்தின் வெவ்வேறு தட்டுகளை ஒன்றாக இணைக்கின்றன. அவை நிலையான இயக்கத்தில் உள்ள தட்டுகளைக் கொண்டுள்ளன. எனவே, அரேபியர்கள் மலைகளைத் தூண்களாகக் கருதிய காலத்தில் திருக்குர்ஆன் விவரித்த ஆணி, இப்போது விஞ்ஞானிகளின் கண்டுப்பிடிப்புகளோடு நிச்சயமாக ஒத்துப் போகின்றது.

### இப்போது நிலத்திலிருந்து கடலுக்கு செல்வோம்

وَهُوَ الَّذِىۡ مَرَجَ الۡبَحۡرَيۡنِ هٰذَا عَذۡبٌ فُرَاتٌ وَّهٰذَا مِلۡحٌ اُجَاجٌ ۚ
وَجَعَلَ بَيۡنَهُمَا بَرۡزَخًا وَّحِجۡرًا مَّحۡجُوۡرًا

அவனே இரண்டு கடல்களைப் பாயச் செய்துள்ளான். அவற்றுள் ஒன்று சுவையானதும், இனியதுமாகும். மற்றொன்று உவர்ப்பானதும், கசப்பானதுமாகும். அவன் அவ்விரண்டிற் -கிடையில் ஒரு தடையை ஏற்படுத்தியுள்ளான். ஒன்றுடன் ஒன்று இணைந்து விடாது தனித்தனியே இருக்குமாறும் செய்துள்ளான். (25:54)

இது ஒரு நிகழ்வாகும். இது வெவ்வேறு கடல்களைக் குறிக்கிறது. அங்கு நீர் ஒன்று சேருகிறது. ஆனால் விசித்திரமாக ஒன்றோடொன்று கலக்காது, அவற்றுக்கிடையே ஒரு தடை இருப்பது போல, பல்வேறு அடர்த்திகள் மற்றும்



மேற்பரப்பு இழுவிசை காரணமாக, நீர் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று கலப்பதைத் தடுக்கிறது என்பதைக் கடல்சார் ஆய்வாளர்களின் நவீன அறிவியல் ஆராய்ச்சி காட்டும் வரை இது அறியப்படவில்லை. இரண்டு கடல்களிலும் வெவ்வேறு அடர்த்திகள் மற்றும் வெவ்வேறு கடல்வாழ் உயிரினங்கள் இருந்தன. மேலும் இந்தத் தடையானது கடலின் மேலிருந்து கீழ்வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இங்கு பாலைவனத்தில் வாழ்ந்து குகையில் இறைவணக்கம் செய்த ஒரு மனிதர் தண்ணீர் மற்றும் கடல் பற்றிய நிகழ்வுகளை வெளிப்படுத்துகிறார்!

பூமியில் நாம் உயிர் வாழ்வதற்கு அல்லாஹ் உருவாக்கிய சூழ்நிலைகள் ஏராளம். ஆனால் மனிதன் அவற்றை அழிக்கவே முனைந்திருப்பதாகத் தெரிகிறது. பூமிக்கு பாதுகாப்பு அடுக்கு இல்லையென்றால் நாம் வாழ முடியாது என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். தீங்கு விளைவிக்கும் கதிர்வீச்சுகள் உயிரை அழிக்கும். நீங்கள் என்னிடம் எக்ஸ்ரே எடுக்க வந்தீர்கள் என்றால், அதை எடுத்துக் கொண்டு நான் கதிர்களில் இருந்து தப்பிக்க அறையை விட்டு வெளியேறுகிறேன். பூமிக்கு மேலே உள்ள விண்வெளியில் உள்ள காமாக் கதிர்கள் மற்றும் பிறவற்றுடன் ஒப்பிடும்போது அவை ஒன்றும் இல்லை. பின்னர் சிறு கோள்கள் அல்லது விண்வெளியின் கடுமையான குளிர், மறுபுறம் 100 பில்லியன் அணு குண்டுகளின் ஆற்றல் கொண்ட ஒரு சூரியன் வெடிப்பதால் ஏற்படும் ஆபத்து இருக்கின்றது.

குர்ஆன் இவ்வாறு அறிவிக்கின்றது.

وَجَعَلۡنَا السَّمَآءَ سَقۡفًا مَّحۡفُوۡظًا ۖۚ وَّهُمۡ عَنۡ اٰيٰتِهَا مُعۡرِضُوۡنَ

வானத்தைப் பாதுகாப்பான கூரையாக ஆக்கினோம். எனினும், அவர்கள் அதன் அடையாளங்களைப் புறக்கணிக்கின்றனர். (21:33)

1950-களில் ஒரு மேற்கூரை, அதாவது வான் ஆலன் பெல்ட் (Van Allen Belt), ஒரு பாதுகாப்பு அடுக்கு என்று முதல்

முறையாக கண்டுபிடிக்கப்பட்டது. இதுதான் மேற்கூரை. இது நம்மைக் காக்கும் கூரை. நமது பூமிக்கே தனித்துவமானது. விஞ்ஞான கண்டுபிடிப்புகளால் சமீப காலம் வரை மனிதனால் அறியப்படாத இந்தப் பாதுகாப்பைப் பற்றி இவ்வளவு தெளிவான சொற்களில் நாம் கூறுகிறோம். ஆனால் மனிதன் நன்றி கெட்டவனாக திருக்குர்ஆனின் உண்மையை ஏற்க மறுக்கிறான். முந்தைய வேதங்களில் குறிப்பிடப்படாத கடந்த கால நிகழ்வுகளின் மறைக்கப்பட்ட உண்மைகளைக் குறிப்பிடுவதில் திருக்குர்ஆன் தனித்துவமானது. மற்ற வேதங்களிலும் ஒரு நிகழ்வு குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அங்கு அது ஓரளவு மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

நான் எகிப்திலிருந்து பனீ இஸ்ராயீல் மக்கள் கொடுங்கோல் ஆட்சியாளரான ஃபிர்அவ்ன் வெளியேறியதைக் குறிப்பிடுகிறேன். பைபிளின் நற்செய்திகள் கடல்களைப் பிரிப்பதை விவரிக்கின்றன. இது ஹாலிவுட்டில் உள்ள திரைப்படத் தொகுப்புகளிலும் சித்தரிக்கப்பட்டுள்ளது. அந்த மக்களைப் பின்தொடர்ந்து வரும் ஃபிர்அவ்ன் மூழ்கடிக்கப் -படுவதையும் சித்தரிக்கிறது. உலகம் அறியாத ஒன்று, திருக்குர்ஆன் மட்டுமே குறிப்பிடும் ஒரு பெரிய அதிசயம்.

ஃபிர்அவ்ன் மூழ்கும் தருவாயில் இருந்தபோது, அவன் நம்பிக்கை கொண்டு இறைவனுக்கு கீழ்ப்படிந்தான். (சூரா யூனுஸ் 92-93)

அல்லாஹ் கூறினான்.

آٰلۡــٰٔنَ وَقَدۡ عَصَيۡتَ قَبۡلُ وَكُنۡتَ مِنَ الۡمُفۡسِدِيۡنَ

அதற்கு நாம் கூறினோம்: நீ முன்னர் கட்டுப்படாத -வனாய் இருந்திருந்தும், குழப்பம் விளைவிப்போரில் ஒருவனாய் இருந்தும், இப்பொழுதுதானா (நம்பிக்கை கொள்கிறாய்)? (10:92)

فَالۡيَوۡمَ نُنَجِّيۡكَ بِبَدَنِكَ لِتَكُوۡنَ لِمَنۡ خَلۡفَكَ اٰيَةً ‌ؕ
وَاِنَّ كَثِيۡرًا مِّنَ النَّاسِ عَنۡ اٰيٰتِنَا لَغٰفِلُوۡنَ

எனவே உனக்குப் பிறகு வரப்போகிறவர்களுக்கு, நீ ஓர் அடையாளமாக இருப்பதற்காக இப்பொழுது நாம் உன்னை உன்னுடைய உடலளவில் காப்பாற்றுகிறோம். மேலும் நிச்சயமாக மக்களுள் பெரும்பாலார் நம்முடைய அடையாளங்களைப் பற்றி கவனமற்றவர்களாக இருக்கின்றனர். (10:93)

எனவே, இது வெளிப்படுவதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு நிகழ்வு, எகிப்திய மன்னர்களின் கல்லறைகள் பாலைவன மணலில் ஆழமாகப் புதைந்து கிடந்தன. மேலும் உடல்களைப் பாதுகாக்க மம்மிஃபிகேஷன் செய்வது அந்தக் கால மக்களுக்குத் தெரியாது. நிச்சயமாக அரேபியர்களுக்குத் தெரியாது. ஒன்று, உடலைக் காப்பாற்றி இருக்க முடியும். இரண்டாவதாக, அது பாதுகாக்கப் -பட்டிருக்கும் என்பது நினைத்துப் பார்க்க முடியாதது.

இறையறிவிப்பிற்கு பிறகு இன்னும் 1000 ஆண்டுகள் கடந்து செல்கின்றன. 1800-களில் மம்மிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. மிகவும் அதிநவீன முறைகளைப் பயன்படுத்தி தடயவியல் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், நபி மூஸா (அலை) அவர்களின் வருகையின் போதும், வெளியேற்றத்தின் போதும் ஆட்சி செய்த ஃபிர்அவ்ன்களின் அடையாளங்களை உறுதிப்படுத்த முடியும். பரவலாக அறியப்பட்ட ஒருநிகழ்வு, முழுமையாகக் குறிப்பிடப்பட்டு, 3000 ஆண்டுகளாக மறைக்கப்பட்டு, பின்னர் அறிவியல் அதை வெளிக்கொணர்ந்து, திருக்குர்ஆனின் உண்மையை சந்தேகத்திற்கு இடமின்றி காட்டுவதால், திருக்குர்ஆன் தனித்துவமானது.



இந்த மம்மிகள் எகிப்தில் உள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. நீங்கள் அவற்றைப் பார்க்கச் செல்லும் போது, அல்லாஹ் ஃபிர்அவ்னுக்கு அளித்த வாக்குறுதிக்கு நீங்கள் தனிப்பட்ட சாட்சிகளாக இருக்கிறீர்கள்.

திருக்குர்ஆனின் உண்மையை நிரூபிக்கும் அறிவியல் கண்டுபிடிப்புகளின் பட்டியல் நீளமானது. காலம் குறைவாக இருப்பதனால் பலவற்றைப் பகிர்ந்து கொள்ள எனக்கு அனுமதி இல்லை. கடைசியாக ஒன்றைப் பகிர்ந்து கொள்ள என்னை அனுமதியுங்கள்.

حَتّٰٓى اِذَا مَا جَآءُوۡهَا شَهِدَ عَلَيۡهِمۡ سَمۡعُهُمۡ وَاَبۡصَارُهُمۡ
وَجُلُوۡدُهُمۡ بِمَا كَانُوۡا يَعۡمَلُوۡنَ

இறுதியாக, அவர்கள் அதனை அடையும்போது, அவர்கள் செய்து கொண்டிருந்தது குறித்து அவர்களின் காதுகளும், அவர்களின் கண்களும், அவர்களின் தோல்களும் அவர்களுக்கு எதிராக சாட்சி கூறும். (41:21)

இது முதன்மையாக நியாயத் தீர்ப்பு நாளைக் குறிக்கிறது, ஆனால் திருக்குர்ஆன் ஆழமான அர்த்தத்தைக் கொண்டுள்ளது. நமது சருமம் நமது உடலில் மிகப்பெரிய உறுப்பாகும். ஆனால் அதற்கு நாவு இல்லை. எனவே அது எவ்வாறு சாட்சியமளிக்க முடியும்? எந்தவொரு சர்ச்சையிலும் உண்மையைத் தீர்மானிப்பதில் சாட்சியம் அளிப்பது ஒரு முக்கிய பகுதியாகும். திருக்குர்ஆன் என்ன முன்னறிவித்தது என்பது அந்த நேரத்தில் உலகிற்குத் தெரியாது.

நம் விரல்களில் உள்ள தோல் என்பது அனைவருக்கும் தனித்துவமான விரல் ரேகை. இது 20 ஆம் நூற்றாண்டில் முதல் முறையாகப் பயன்படுத்தப்பட்டது. அந்த தோல் உண்மையிலேயே பேசியது. அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதை அது வெளிப்படுத்தியது!

அது இப்போது ஒரு படி மேலே சென்று, தோலில் இருந்து எடுக்கப்படும் டிஎன்ஏ, தனி நபர்களின் அடையாளம் மட்டுமல்லாமல், போதைப் பொருள் பயன்பாடு போன்ற தகவல்களையும் வெளிப்படுத்துகிறது.

சருமத்தைப் பற்றி திருக்குர்ஆன் குறிப்பிடும் உண்மையை இப்போது நவீன அறிவியல் நம்பியிருப்பது எவ்வளவு அற்புதமானது.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள குறிப்பிட்டதை நினைவுபடுத்துகின்றேன். இவை திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள மறைவான உண்மைகள், இவை கண்ணுக்குத் தெரியாத விஷயங்கள். இவை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிந்திருக்க முடியாது. நவீன அறிவியல் கண்டுபிடிப்புகள் இப்போது வெளிப்படுத்துகின்றன, இது திருக்குர்ஆனின் உண்மைக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட சான்றாகும்.

திருக்குர்ஆன் மனிதகுலத்திற்கு வழிகாட்டியாகும். மேலும் மனிதன் இரட்சிப்பைக் காண வேண்டுமானால், அது திருக்குர்ஆனின் போதனைகளைப் பின்பற்றுவதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும்.

இது அல்லாஹ்வின் கயிறு ஆகும். (3:104)

கயிற்றின் மற்றொரு நீட்சி கிலா∴பத் வடிவத்தில் நமக்குள் உள்ளது. அவர்கள் நம்மையும் முழு மனிதகுலத்தையும் வழிநடத்த பாடுபடுகிறார்கள், மேலும் நமது படைப்பாளனுடனான தொடர்பைக் கட்டியெழுப்ப நினைவூட்டுகிறார்கள். அதில்தான் இரட்சிப்பு உள்ளது. நமது இமாம் இந்த Theme-ஐ தேர்ந்தெடுத்துள்ளார்கள். திருக்குர்ஆன் இறைஞானத்துடன் மனிதகுலத்திற்கு வாழும் வழிகாட்டியாகும்.

அந்தப் பொறுப்பு நம் தோள்களில் உள்ளது, அது கனமான ஒன்றாகும்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வார்த்தைகளுடன் உங்களிடமிருந்து விடை பெறுகின்றேன். அவர்கள் தங்களது கிஷ்தி நூஹ் என்ற நூலில் எழுதுகின்றார்கள்:

ஆதலால் மிகக் கவனமாய் இருங்கள். இறைவனது போதனைக்கும் திருக்குர்ஆனின் நேர்வழிக்கும் மாறாக ஒரு அடி கூட எடுத்து வைக்க முற்படாதீர்கள். எவர் திருக்குர்ஆனின் 700 கட்டளைகளில் ஒரு சிறிய கட்டளையாவது மீறுவாரோ அவர் தனது இரட்சிப்பின் வாசலைத் தனது கரங்களால் தானே அடைத்துக் கொள்கிறார் என்பதனை நான் உங்களுக்கு உண்மையாகவே கூறுகின்றேன். உண்மையானதும் முழுமையானதுமான இரட்சிப்பிக்குரிய வழிகளை திருக்குர்ஆனே நமக்கு திறந்து தந்திருக்கின்றது. எஞ்சியிருப்பவை அனைத்தும் அதன் நிழல்களாகும். ஆகவே நீங்கள் திருக்குர்ஆனை மிகவும் கருத்தூன்றிப் படியுங்கள். அதனை மிகவும் மேலாக நேசியுங்கள். வேறெதனோடும் வைக்காத பற்றை அதனோடு வையுங்கள். ஏனெனில் இறைவன் என்னை நோக்கி அல் கைரு குல்லுஹூ ∴பில் குர்ஆன் என்று கூறியுள்ளான். அதாவது எல்லா விதமான நன்மைகளும் திருக்குர்ஆனில் உள்ளது என்பதாகும்.

உண்மையும் இதுவேயாகும். திருக்குர்ஆனைக் காட்டிலும் மற்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கும் மக்களைக் குறித்து நான் பரிதாபம் கொள்கிறேன். உங்களின் எல்லா விதமான வெற்றிகளுக்கும் இரட்சிப்பிற்கும் ஊற்றின் உறைவிடம் திருக்குர்ஆனில் உள்ளது. திருக்குர்ஆனில் காணப்படாத உங்களது எந்த மார்க்கத் தேவையுமில்லை!
(எஸ்ஸென்ஸ் ஆ∴ப் இஸ்லாம், தொகுதி 1 பக்கம் 400-401. கிஷ்தி நூஹ், ருஹானீ கஸாயின், தொகுதி 19 பக்கம் 26-27)

திருக்குர்ஆன் ஒரு பொக்கிஷம் ஆகும். ஆனால் அதை அறிந்தவர்கள் வெகுசிலரே.
திருக்குர்ஆனின் தெளிவான அற்புதம், ஒவ்வொரு மக்களுக்கும் தன்னை வெளிப்படுத்தி, இந்தியராக இருந்தாலும் சரி, பாரசீகராக இருந்தாலும் சரி, ஐரோப்பியராக இருந்தாலும் சரி, அமெரிக்கராக இருந்தாலும் சரி, அனைவரையும் மௌனமாக்கக்கூடியதாக உள்ளது. இது, ஒவ்வொரு காலகட்டத்திலும் அதன் தேவைக்கேற்ப விளக்கப்பட்டு, ஒவ்வொரு யுகத்தின் சிந்தனையையும் முறியடிக்க ஆயுதமேந்திய படைவீரர்களாக நிற்கும் நுண்ணறிவு மற்றும் உண்மைகளின் வரம்பற்ற கருவூலமாகும்.
(ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது அலைஹிஸ்ஸலாம்)

# அல்லாஹ்வின் மன்னிப்பு, கருணை மற்றும் அருள்

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் (ரஹி) அவர்கள் 29.06.2001 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையிலிருந்து.....



வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. தான் விரும்புபவரை மன்னிக்கின்றான்; தான் விரும்புபவருக்கு அவன் தண்டனை வழங்குகிறான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணைகாட்டுபவனுமாவான்.'' (48 : 15)

இங்கு, 'தான் விரும்புபவரை மன்னிக்கிறான்; தான் விரும்புபவரை தண்டிக்கிறான்' என வந்துள்ளது. இதுபற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: தான் விரும்புபவருக்கு என்றால், எந்த விதமான குறிக்கோளுமின்றி தான் விரும்புவரை சுவர்க்கத்தில் நுழைக்கிறான்; தான் விரும்புபவரை நரகத்தில் நுழைக்கிறான் என்று பொருளல்ல. விரும்புகிறான் என்றால் யார் மன்னிக்கப்படத்தக்கவர்கள்; யார் தண்டிக்கப்படத்தக்கவர்கள் என்பதை அவன் நன்கு அறிகிறான்.

சூரா ஃபதஹ்-ன் இந்த வசனத்திற்கு ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறும் விளக்கத்தை எடுத்துரைக்கிறேன். அவர்கள் எழுதுகிறார்கள்:

''அல்லாஹ் தான் நாடுபவரை மன்னிக்கிறான்; தான் நாடுபவரை தண்டிக்கிறான் என்பதற்கு ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன். இங்கு காஷ்மீரில் ஒருவர் பணிபுரிந்து வந்தார். அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்தார். பைஅத் செய்த பிறகு கூறினார்: இனி நான் பாவம் செய்தால் அல்லாஹ் என்ன விரும்புகிறானோ தண்டனை தரட்டும்.''

அவர் அல்லாஹ்வின் மீது அசட்டுத் துணிச்சல் கொண்டார். நான் என்ன பாவம் செய்தாலும் அல்லாஹ் தான் விரும்பும் தண்டனையைக் கொடுக்கட்டும் எனக் கூறினார். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

''அவர் இவ்வாறு கூறிவிட்டு சென்று விட்டார். ஆனால் என்னுடைய உள்ளம் நடுங்கியது. கடைசியில் சின்ன வியாபாரத்தினால் மூவாயிரம் ரூபாய் அவரிடம் சேர்ந்தது. பிறகு இன்னொருவருடைய சாட்சியை வைத்து, இவர் வட்டிக்கு விடுகிறார். நானே என் மூலமாக அவருக்கு கொடுத்து வந்திருக்கிறேன் என அவர் மீது பெரிய வழக்கு தொடுக்கப்பட்டது. அப்போது அவர் மிகவும் மன்றாடி துஆவுக்காக எழுதினார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: துஆவில் உள்ளத்தின் கவனம் நிலை நிற்கவில்லை. சோதனை எனத் தெரிகிறது. எதுவரையென்றால், அந்த மூவாயிரம் ரூபாயும் வழக்குக்காகவே செலவாகி விட்டது. கடைசியில் கைது செய்யுமாறு கட்டளை வந்தது. அப்போது அவர், இறைவன் என்று யாருமில்லை எனத் தெரிகிறது. துஆவும் ஒன்றுமில்லை எனக் கூறினார். தொழுகை -யையும் விட்டு விட்டார். நாத்திகராகி விட்டார். அப்போது அன்று இரவு அவருக்கு கனவு வந்தது. அதில், இனி நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். என்ன பாவம் செய்தாலும் இறைவன் என்ன தண்டனை தர விரும்புகிறானோ கொடுக்கட்டும் என நீர் கூறினீரே! ஆனால் இப்போது சாதாரண தண்டனையினால் இறைவனையே மறுத்து விட்டீரா? என ஒருவர் கேட்டார். அப்போது அவர் அந்த நேரமே எழுந்து, அதிகமாக பாவமன்னிப்புக் கோரினார். கலிமா ஷஹாதத் ஓதினார். தொழுதார். அல்லாஹ்வின் பக்கம் கவனத்தைத் திருப்பினார்.

இந்த வழக்கின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யுங்கள் என ஒருவர் அவருக்கு ஆலோசனை கூறினார். அவர் இல்லை; இனி இறைவனிடமே விட்டு விட்டேன் என்றார். அவருடைய உறவினர்கள் தீர்ப்பை மறுபரிசீலனை செய்தார்கள். அதற்குள் வாதி இறந்து விட்டார். சில விஷயங்கள் விசாரிக்க வேண்டியது உள்ளது. அதற்குள் வாதி இறந்து விட்டார். எனவே இவர் விடுதலை செய்யப் -படுகிறார் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பாருங்கள் அவன் ஷதீதுல் இகாப் அதாவது கடுமையாக தண்டிப்பவனும் ஆவான். அதே சமயத்தில் ஒருவர் உண்மையான உள்ளத்துடன் பாவமன்னிப்புக் கோரினால் அவன் கஃபூருர் ரஹீம் - மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான்.''

''இதற்கு முன்னர் நாம் நம் குடும்பத்தினருக்கிடையே (நமது விதியைக் குறித்து) கவலைக்குள்ளாகி இருந்தோம். ஆனால் அல்லாஹ் நம் மீது அருள் செய்து அனல் காற்றின் தண்டனையிலிருந்து நம்மைக் காப்பாற்றி விட்டான். நாம் இதற்கு முன்னர் அவனிடம் வேண்டுதல் செய்து கொண்டிருந்தோம். நிச்சயமாக அவன் மிகுந்த நன்மை செய்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனும் ஆவான்.'' (52:27-29)

இங்கு பர்ருர் ரஹீம் என்று வந்துள்ளது. 'பர் ' என்றால் அதிகமாக நல்ல முறையில் நடந்து கொள்பவன் என்று பொருள். இந்த வசனத்திற்கு விளக்கவுரையாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''ரஹீமிய்யத் என்பது நல்ல வேலை செய்பவர்களுக்கு இறைவனிடமிருந்து கிடைப்பதாகும். அவர்கள் எந்நேரமும் நன்மை செய்ய ஆயத்தமாக இருக்கிறார்கள். அவர்கள் அதில் எந்தக் குறைபாடும் வைப்பதில்லை. அவர்கள் அல்லாஹ்வை நினைவு கூறுகிறார்கள்; ஒருபோதும் கவனமற்றவர்களாக இருப்பதில்லை. கண்களை பயன்படுத்துகின்றார்கள்; குருடராகி விடவில்லை. கம்பீரமான இறைவனின் கோபத்தை விட்டும்

தப்பித்திருக்கிறார்கள். தன் இறைவனுக்கு சஜ்தா செய்தவாறும் நின்றவாறும் இரவைக் கழிக்கிறார்கள். பகலில் நோன்பு வைக்கிறார்கள். தனது மரணத்தை - தன் உண்மையான எஜமானனின் பக்கம் திரும்புவதை அவர்கள் மறப்பதில்லை. ஒருவருடைய மரண செய்தியைக் கேட்டால் அதிலிருந்து படிப்பினை பெறுகிறார்கள். பிறருடைய நண்பர் காணாமற்போய் விட்டால் நடுங்குகிறார்கள். நண்பர்களின் மரணத்தினால் தன் மரணத்தை ஞாபகம் செய்கிறார்கள். தனது சம வயதுடையவர்களின் (கபரின்) மீது மண் போடுவது அவர்களை அச்சமூட்டுகின்றது. எனவே அவர்கள் அவரைப் பற்றிய துக்கத்தினால் உருகி விடுகிறார்கள். நண்பர்களின் பிரிவு அவர்களுக்கு தனது மரணத்தின் காட்சியைக் காட்டுகின்றது. அல்லாஹ்வின் பக்கம் திரும்புகிறார்கள். நல்லவர்களாகிறார்கள்.''

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களுக்கென குறிப்பிட்டுள்ள இந்த அளவுகோலை நாம் நமக்குப் பொருத்திப் பார்த்தால், நம்மில் யாருமே நம்பிக்கைக் கொண்டவர்கள் இல்லை என்பதுபோல தெரிகிறது. நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தை சேர்ந்தவர்கள் என்றால், இந்த கடினமான நிபந்தனைகளைப் பேணவேண்டும் என்பதை நாம் மறந்து விடுகின்றோம். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வகுத்துள்ள கடினமான நிபந்தனைகள் மிக உயர்ந்த நம்பிக்கை கொண்டவர்களுக்கான நிபந்தனை -களாகும் என நான் பலமுறை புரிய வைத்திருக்கிறேன். அவர்கள் தமது ஜமாஅத்தை இவ்வளவு உயர்ந்த அளவுகோளால் பிரித்தறிய விரும்புகிறார்கள் என்பது மட்டுமே என் கருத்தாகும். ஆனால் ஒருவர் பலவீனமானவ -ராக இருக்கின்றார் என்றால், அவர் இந்த வழியிலிருந்தே தம் காலை தடுத்து விடக்கூடாது என்பதல்ல; முயற்சியையே விட்டுவிடக் கூடாது என்பதல்ல. எனவே நாம் நமது முயற்சிகளை தொடர வேண்டும். இயன்றவரை நாம் நமது பாவங்களிலிருந்து பாவமன்னிப்பும் கோர வேண்டும். அல்லாஹ்விட -மிருந்து கருணையை வேண்ட வேண்டும்.

''ரஹீமிய்யத் என்ற பண்பும், அல்லாஹ்வின் வேதம், அதன் போதனை, கருத்து ஆகியவையும் இரட்டைக் குழந்தைகளாகும்.''

அதாவது ரஹீமிய்யத் மற்றும் அல்லாஹ்வின் வேதம் இவை இரண்டும் இரட்டைக் குழந்தைகளாகும். ரஹீமிய்யத் இல்லையென்றால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய இந்த வேதமும் இறங்கியிருக்காது.

''இந்த வேதம் இறங்குவதற்கு முன்னர் யாரையும் பிடிக்க முடியாது. விஷயம் தெளிவாக விளக்கப்படாத வரை எவரும் பிடிபடவும் மாட்டார். அல்லாஹ்வுடைய கடுமையான கோபம் ஒருவர் மீது இறங்குவதுமில்லை. இந்த ரஹீமிய்யத் வெளிப்படாதவரை எந்தவொரு தீய மனிதனும் அவருடைய தீமைக்காக பிடிபடமாட்டார்.''

இங்கு ஒரு சிக்கல் உருவாகிறது. ரஹீமிய்யத் மற்றும் வேதம் இறங்கிய பிறகு பிடிபடுவோம் என்றால் இந்த வேதம் இறங்காமலே இருந்து, யாரும் தண்டிக்கப் -படாமலே இருந்தால் சிறந்ததாக இருந்திருக்காதா? என்ற கேள்வி எழுகிறது. ஆனால் அது இறை நியதிக்கு மாறுபட்டது. எவருக்கும் தண்டனையே கொடுக்கா விட்டால் உலகம் இப்போது எவ்வளவு பாவங்களால் நிரம்பி காணப்படுகிறதோ அதை விட அதிகமான பாவங்களால் நிரம்பிக் காணப்படும். அதை நாம் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. பாருங்கள், அரசாங்கம் தண்டனை கொடுத்தும் எவ்வளவு பேர் கொலை செய்யப்படுகிறார்கள்? உலகத்தின் இந்த குறைந்த தண்டனைக்கே பயந்து, குற்றம் செய்பவர்கள், தாம் பிடிபடக் கூடாது என முயற்சி செய்கிறார்கள். ஆனால் பெரும்பாலும் பிடிபடுகிறார்கள். அவர்களைப் பார்த்தும் படிப்பினை பெறுவதில்லை. இந்தத் தண்டனை இல்லையென்றால், இவ்வுலகம் அதிக பாவங்களால் நிறைந்து இறைவனுடைய கோபத்தால் அது முழுமையாக அழிக்கப்பட்டிருக்கும். ஆனால் அவன் மன்னிக்கின்றான்; மீண்டும் மீண்டும் கருணை செய்கிறான்; நாம் நமது பாவங்களிலிருந்து பாவமன்னிப்புத் தேடவும், அவனுடைய கருணையைப் பெறவும் அவன் மீண்டும் மீண்டும் வாய்ப்பு வழங்குகிறான்.

''அவன் உங்களை(ப் பல வகையான) இருள்களில் இருந்து ஒளியின் பக்கம் கொண்டு வருவதற்காக, அவனே தன் அடியாருக்கு ஒளிமிக்க அடையாளங்களை இறக்கு -கிறான். நிச்சயமாக அல்லாஹ் உங்களிடம் மிக்க இரக்கம் காட்டுபவனும், மேன்மேலும் கருணைகாட்டுபவனும் ஆவான்.'' (57:10)

ஒளிமிக்க அடையாளங்களை இறக்குகிறான் எனக் கூறியதற்கேற்ப, இருள்களிலிருந்து உங்களை ஒளியின் பக்கம் கொண்டு வருவதை அதன் குறிக்கோளாகக் குறிப்பிட்டிருக்கிறான். அடுத்து அல்லாஹ் ரஊஃப், ரஹீம் ஆக இருக்கிறான் என வருகிறது. உண்மையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் காணப்பட்ட பண்பு இறைவனுடைய பண்பாகும். அவர்கள் இறை பண்புகளுக்கு முன்னால் எந்த அளவுக்கு குனிந்தார்கள் என்றால் அவர்கள் அந்தப் பண்புகளைப் பெற்றுக் கொண்டார்கள். இந்த வகையில் ரஊஃபுர் ரஹீம் என்ற சொல் ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காகவும் பயன்படுத்தப் -பட்டுள்ளது. இதே சொல் உண்மையில் அடிப்படையான முறையில் அல்லாஹ்வுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

''ஒருவர் தினசரி இருளிலிருந்து வெளியேறி ஒளியின் பக்கம் செல்லவில்லையென்றால், அவர் நம்பிக்கை கொண்டவர் இல்லை. இதனை ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டும்.''

இதுவும் நமது செயல்களைக் கண்டறியும் உயர்ந்த வழிமுறையாகும். உண்மையில் ஒவ்வொரு நம்பிக்கை கொண்டவரும் தனது செயல்களைக் கண்டறிய இந்த உரை கல்லை தனக்கு முன்னால் வைக்க வேண்டும். அவருடைய ஒரு தீமை தினசரி விலகி தனியாகப் போகவில்லை -யென்றால், ஒரு நன்மை வரவில்லையென்றால்

கொஞ்சமாக இருந்தாலும் - தனது கால்கள் முன்னேற்றத்தை நோக்கியில்லை என்பதை அவர் உணர்ந்து கொள்ள வேண்டும். நம்மிடம் அதிகமான பாவங்கள் இருக்கின்றன. தினசரி அந்த பாவங்களில் சிலவற்றை நீக்கி சுத்தப்படுத்தி -னாலும் அவை எஞ்சியிருக்கும். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அடைந்த படித்தரத்தை அடைவதென்பது மிகமிக கடினமானதாகும். எத்தகைய உயர்ந்த அந்தஸ்து என்றால், மனிதன் அந்த அந்தஸ்தை நினைத்துப் பார்க்கும் போது பயம் ஏற்படுகிறது. இந்த மகத்தான பயணத்தை நாம் எப்படி கடந்து செல்லப் போகிறோம் எனத் தோன்றுகிறது. ஆனால் பயணம் மேற்கொள்வது நிபந்தனையாகும். மனிதன் பயணத்தை மேற்கொண்டு விட்டால் கொஞ்சமாவது பயணத்தை கடந்து சென்று கொண்டிப்பான். எவ்வளவு நீண்ட பயணமென்றாலும் ஒவ்வோர் அடியாக அதை நோக்கி எடுத்து வைத்தாலும் கடைசியில் அந்தப் பயணதூரத்தை கடந்து சென்று விடுகிறான். இதே மாதிரி தான் இறையடியார்கள் தமது நற்செயல்களை செய்ய வேண்டும். ஒவ்வோர் அடியாக சிந்தித்து நிதானமாக எடுத்து வைக்க வேண்டும். ஏதோவதொரு தீமையை நீக்கிக் கொண்டே செல்ல வேண்டும். அந்தத் தீமையின் இடத்தில் ஏதாவதொரு நன்மையை நுழைத்துக் கொண்டே செல்ல வேண்டும். அதற்குப் பெயர் தான் இருள்களிலிருந்து விலகி ஒளியின் பக்கம் பயணம் செய்தல் ஆகும். (57:10 காண்க).

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''மனிதனுடைய மனதில் தோன்றுகின்ற எல்லா சந்தேகங்களையும், வீண் எண்ணங்களையும் திருக்குர்ஆன் களைகின்றது. எல்லாவிதமான தீய எண்ணங்களையும் அழித்து விடுகின்றது.''

எல்லா விதமான தீய எண்ணங்களை அழிப்பதற்கும் திருக்குர்ஆனில் ஏதாவதொரு வசனம் இருக்கிறது என்பதில் எந்த சந்தேகமுமில்லை. ஆரம்பத்திலிருந்து கடைசி வரை கவனமாகப் படித்தால், எவ்வளவு தடுக்கப்பட்டவை உள்ளன? எவ்வளவு கட்டளைகள் உள்ளன என்று ஆச்சரியம் ஏற்படுகிறது. இதைச் செய்யுங்கள் என்று கூறுகின்ற ஒவ்வொரு கட்டளையும் ஒளியை நோக்கிய பயணமாகும். இதைச் செய்யாதீர்கள் என்று கூறுகின்ற தடுக்கப்பட்டவை இருள்களிலிருந்து தப்பிப்பதற்கான பயணமாகும்.

ஹஸ்ரத் வாக்களிப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ''மனிதனுடைய மனதில் தோன்றுகின்ற எல்லா சந்தேகங்களையும், வீண் எண்ணங்களையும் திருக்குர்ஆன் களைகின்றது. எல்லா விதமான தீய எண்ணங்களையும் அழித்து விடுகின்றது. மேலும் முழுமையான இறைஞானம் என்னும் ஒளியை வழங்குகின்றது. இறைவன் பக்கம் திரும்புவதற்கும், அவன் மீது உறுதி கொள்வதற்கும் தேவையான இறைஞானம் அனைத்தையும் வழங்குகின்றது.''

திருக்குர்ஆனில் எல்லா விஷயமும் இருக்கிறது. இதில் இல்லாத சின்ன விஷயம் கூட இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலத்தின் விஷயங்களும் உள்ளன; அவர்களுக்கு முன்னர் மனிதகுலம் தோன்றியது பற்றிய விஷயங்களும் உள்ளன; உலகம் தோன்றியது பற்றிய விஷயங்களும் உள்ளன. எவ்வாறு மனிதன் படைக்கப்பட்டான்? ஜின்கள் எப்படி உருவாயின? ஜின்கள் என்பதன் கருத்து என்ன? இவையெல்லாம் ஒரு நீண்ட கருத்தாகும். இவற்றைப் பற்றியெல்லாம் திருக்குர்ஆனில் உள்ளது. இது திருக்குர்ஆனின் தலைப்பாகும். பிறகு கடைசி காலத்தைப் பற்றிய குறிப்பும் உள்ளது. கடைசி காலம் வரை தோன்றும் சம்பவங்கள் பற்றியும் திருக்குர்ஆனில் உள்ளது. உதாரணமாக, மனிதனைத் தவிர இன்னொரு உயர்ந்த படைப்பினமும் இந்த உலகத்திலேயே உருவாகவிருக்கின்றது. அப்போது ஒரு புரட்சி ஏற்படும். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (அலை) அவர்கள் வருவதன் நோக்கம் நிறைவேறி, அவர்களை முழுமையாக மறுத்தன் விளைவாக மக்களுக்கு முழுமையான அழிவு வரும். பிறகு இறைவன் இந்த உலகத்திலிருந்தே இன்னொரு படைப்பினத்தை உருவாக்குவான். இப்போது இந்த விஷயங்களிளெல்லாம் வியப்பிற்குரியவைதான். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு தாமாகவே இந்த விஷயங்களின் பக்கம் சிந்தனை கூட சென்றிருக்க முடியாது. ஆனால் இந்த விஷயங்கள் திருக்குர்ஆனில் உள்ளன. எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது போல, உலகத்திலுள்ள எல்லா வேதங்களையும் பார்த்தாயிற்று; ஆனால் திருக்குர்ஆனைப் போன்றதொரு வேதத்தை நாம் எங்கும் காணவில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை ரஹ்மத்துல் லில் ஆலமீன் எனக் கூறக் காரணம், நாம் உம்மை ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு அருட்கொடையாக அனுப்ப -வில்லை. மாறாக, முழு உலகத்திற்கும் அருள் செய்வதற்காக உம்மை அனுப்பியிருக்கிறோம். இறைவன் முழு உலகத்திற்கும் இறைவனாக இருப்பதைப்போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு உலகத்திற்கும் இறைதூதர் ஆவார்கள்; முழு உலகத்திற்கும் அருட்கொடை ஆவார்கள். அவர்கள் எந்தக் குறிப்பிட்ட சமுதாயத்துடனும் அல்லாமல் முழு உலகத்துடனும் அநுதாபம் கொண்டிருக் -கிறார்கள்.''

> **ஒருவர் தினசரி இருளிலிருந்து வெளியேறி ஒளியின் பக்கம் செல்லவில்லையென்றால், அவர் நம்பிக்கை கொண்டவர் இல்லை. இதனை ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டும்.**
>
> **ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி)**




## முன்னுரை

பராஹீனே அஹ்மதிய்யா பாகங்கள் ஒன்று மற்றும் இரண்டு ஆகியவை ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது அலைஹிஸ்ஸலாம் அவர்களால் எழுதப்பட்டு 1888 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அக்காலகட்டத்தில் இந்திய துணைக்கண்டம் உலகளாவிய பெரிய மார்க்கங்களுக்கான போர்க்களமாகவே காட்சி அளித்தது. இந்நிலையில் கிறிஸ்துவ மற்றும் இந்துக்களால் தொடுக்கப்பட்ட மிகப்பெரிய தாக்குதல்களுக்கு எதிராக, இஸ்லாம் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டியிருந்தது, அவர்கள் இஸ்லாத்தையும் அதன் தோற்றுநரையும் சிறுமைப்படுத்தும் வகையில் எந்த சதி செயலையும் விட்டு வைக்கவில்லை. இஸ்லாத்தின் மீது நடத்தப்பட்ட இப்படிப்பட்ட அநீதியான தாக்குதலால் வேதனையுற்ற ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்களிடம் தொடர் விவாதங்களையும் சொற்பொழிவு -களையும் மேற்கொண்டார்கள்.

தாம் அடைந்த துன்பங்களைக் கீழ்கண்ட கவிதை வரிகளில் அவர்களே விவரிக்கின்றார்கள்:

مرا مقصود و مطلوب و تمنا خدمت خلق است　　ہمیں کارم ہمیں بارم ہمیں رسمم ہمیں راہم
چو شام پر غبار و تیره حال عالمے بینم　　خدا بروے فرود آرد دعا ہائے سحرگاہم

எனது குறிக்கோள் ஏக்கம் மற்றும் என் இதயம் நிறைந்த ஆவல் மனித குலத்திற்கு சேவை செய்வதே. இதுவே என் வேலை. இதுவே என் நம்பிக்கை. இதுவே என் வழக்கம் மற்றும் இதுவே என் வாழ்வின் வழிமுறை. இருள் சூழ்ந்த இவ்வுலகைக் கண்டு இறைவனிடம் பிரார்த்திக் -கின்றேன். இரவின் நேரங்களில் நான் ஏறெடுக்கும் என் பிரார்த்தனையை அவன் ஏற்றருள்வானாக. (பார்க்க தொகுதி 2, முன்னுரை பக்கம் 88)

இஸ்லாத்தில் மட்டுமே தாம் கண்ட ஏகத்துவத்தின் பால் நம்பிக்கையை நிலைநாட்டுவதை தமது அடிப்படை கவலையாகக் கொண்டார்கள். மேலும் கூறுகிறார்கள்: நான் என் எழுத்துக்களின் மூலம் எடுத்துக்காட்ட முற்படும் விஷயம் யாதெனில், ஏகத்துவம், அதன் தூய வடிவில், தூய நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்தொடர்பவர்களைத் தவிர பூமியில் இருக்கும் வேறு எம்மக்களிடமும் காணக் கிடைக்கவில்லை என்பதே. மேலும் திருக்குர்ஆனைத் தவிர பூமியில் இருக்கும் எந்தப் புத்தகமும் அத்தனை உறுதியுடன் இலட்சக்கணக்கான மக்களை இக்கோட் -பாட்டின்பால் நிலை நிறுத்தி மனிதகுலத்தை பயபக்தியுடன் அந்த ஒரே இறைவனை நோக்கி அழைத்துச் செல்லவில்லை.

ஒவ்வொரு மதத்தினரும், அவர்களே செயற்கைத் தெய்வங்களை தங்களுக்காக உருவாக்கிக் கொண்டுள்ளனர். ஆனால் முஸ்லிம்களின் இறைவனோ, அவன் ஒருவன், என்றும் நிலைத்திருப்பவன், மேலும் மாறாத தன்மை உடைய அவனது பண்புகள் முன்பைப் போலவே இன்னும் மாறாதவையாக இருக்கின்றன. (பார்க்க தொகுதி 2 முன்னுரை பக்கம் 138)

இறுதியாக இக்காலத்தின் இஸ்லாத்தின் எதிர்ப்பாளர் -களுக்கு எதிராக இறுதி வாதமாக இருக்கும் பொருட்டு அன்னார், (ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள்) 'பராஹீனே அஹ்மதிய்யா' எனும் இந்நூலை இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் உண்மைக்கு ஆதாரமான வாதங்களின் தொகுப்பாக எழுதும்படியாக முடிவெடுக்கி -றார்கள்.

மேலும் இவ்வாதங்களை மறுக்க விளைபவர்கள், தங்களது வேதங்களின் ஒளியில், இதுபோன்ற ஆதாரங்களை, அவற்றுள் சிறு பகுதியாவது, கொண்டு வருவார்களோ, அவ்வாறு செய்யும் பட்சத்தில் ரூபாய் பத்தாயிரம் - அன்றைய நாட்களில் அன்னாரின் மொத்த சொத்தின் மதிப்பு,-பரிசளிக்க உள்ளதாக விளம்பரப்படுத்தினார்கள். இந்த அறைகூவல் இன்றளவும் போட்டியாளர்கள் இன்றி இருக்கிறது.

மேலும் மார்க்கரீதியிலான கலந்துரையாடல்களில் நேர்மையுடன் நடக்க நேர்த்தியான விதிகளையும் வைத்தார்கள்.

மேலும் கூறினார்கள்: "யாரேனும் இந்நூலிற்குப் பதிலளிக்க விரும்பினால் அவர்கள் இந்நூலின் முதல் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த அறைகூவலின் விதிகளுக்கு ஏற்ப இரு வழிகளில் பதில் அளிக்கலாம். அவர்கள் திருக்குர்ஆனின் வாதங்களுடன் ஒப்புநோக்கும் வகையில், தங்களுடைய வேதங்களில் இருந்து வாதங்களை வைக்கலாம். மேலும் நான் வைத்துள்ள வாதங்களையும் மறுக்கலாம். தங்களின் வேதங்களில் இருந்து ஒப்புநோக்கக் கூடிய ஆதாரங்களை முன்வைக்க அவர்களால் இயலாமல் போகும்பட்சத்தில், முழுமையாக என்னுடைய வாதங்களை

மறுக்க மட்டுமே அவர்கள் முற்பட்டால் தங்களுடைய வேதங்கள் இறைவன் புறத்திலிருந்து வந்தவை என்பதை நிரூபிக்கும் சான்றுகளை அவர்களால் தர இயலவில்லை என்றே கொள்ளப்படும்.” (பார்க்க தொகுதி 2, முன்னுரை பக்கம் 104)

திருக்குர்ஆனின் அடிப்படையில், பரந்து விரிந்திருக்கும் போதனைகளை கொடுத்துள்ள எல்லா மதங்களின் தோற்றுநர்களும் கண்ணியத்திற்குரியவர்களே மற்றும் அவர்கள் அனைவரும் உண்மையாளர்களே என ஏற்றுக் கொள்ள வேண்டுமென அன்னார் பறைசாற்றினார்கள். மார்க்கம் சார்ந்த எல்லா விவாதங்களிலும் உரிய மரியாதை பின்பற்றப்பட வேண்டும் என்றும் கூறினார்கள்.

திருக்குர்ஆன் இறைவன் புறத்திலிருந்து அருளப் -பட்டது என்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத் தன்மையை நிரூபிக்கும் பொருட்டும் 300 அறிவார்ந்த வாதங்களை வைக்கும் நோக்கத்திற்காகவே அன்னார் ‘பராஹீனே அஹ்மதிய்யா’ எனும் நூலை எழுத முனைந்தார்கள்.

‘பராஹீனே அஹ்மதிய்யா’ எனும் இந்நூலை எழுதிக் கொண்டிருந்த காலகட்டத்திலேயே அன்னார் பல இறைவெளிப்பாடுகளைப் பெற்றார்கள். அவற்றுள் பல இந்நூலில் மூன்றாம் மற்றும் நான்காம் பகுதிகளில் இடம் பெற்றுள்ளன.

மேலும் அன்னார் நான்காம் பாகத்தின் இறுதியில் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்: “ஆரம்பத்தில், நான் இந்நூலை எழுதும் பொழுது இருந்த சூழல் தற்போதைய சூழலில் இருந்து மிகவும் மாறுபட்டதாக இருந்தது. அதன் பின்பு மகத்துவமிக்க அல்லாஹ்வின் பாதுகாப்பு, மூஸாவைப் போல், இதற்கு முன் நான் முற்றிலும் அறிந்திடாத, இப்போது அறிந்து கொள்ளத்தக்க வகையில், ஒரு ஆன்மீக ஒளியுடன் என் மீது இறங்கியது. ஹஸ்ரத் இப்னு இம்ரானைப் போன்று நானும் இருண்ட இரவைப் போல என் சொந்த எண்ணங்களுடன் அலைந்து திரிந்து கொண்டிருந்தபோது திடீரென்று மறைவானவற்றிலிருந்து எனக்கு ஒரு குரல்கேட்டது. அது, ‘இன்னீ அனா ரப்புக - நிச்சயமாக நானே உன் இறைவன்’ என்பதாகும். அதற்குப் பின் நான் எண்ணாத, கற்பனை கூட செய்யாத பல இரகசியங்கள் எனக்கு வெளிப்படுத்தப்பட்டது.

அந்த வகையில் அல்லாஹ்வே இந்நூலின் வெளிப்படையான, மறைமுகமான, காவலனாகவும் மேற்பார்வையாளனுமாக இருக்கின்றான். இந்நூலின் நீளத்தை பொருத்தவரை அவனுடைய நாட்டம் என்ன என்பதை நான் அறியேன். இந்நூலின் நான்காம் பாகம் வரை வெளிப்படுத்தி உள்ள, உண்மையாகவே இஸ்லாம் இறைவன் புறமிருந்து தோன்றிய காரணத்தால் பெற்றுள்ள, இறைஅருள்களே இதில் உள்ள வாதங்களை வெற்றி பெறச் செய்ய போதுமானது. இறைவன் தனது அருள் மற்றும் கொடைத் தன்மையின் மூலமாக சந்தேகம் மற்றும் அச்சம் எனும் இருள் முற்றிலும் நீங்கும் வரை தொடர்ந்து தனது ஆதரவை அருளிக் கொண்டே இருப்பான் என்பதே எனது நம்பிக்கை ஆகும்.” (பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 4, ரூஹானீ ஹஸாயின் தொகுதி 1, பக்கம் 673)

இறைவனின் கட்டளைபடி அன்னார் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை 1889 ஆம் ஆண்டு தோற்றுவித்து நேர்மையாளர்கள் தம்மிடம் பைஅத் செய்ய அழைப்பு விடுத்தார்கள். இதன் பின்பு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் முன்னறிவிக்கப்பட்ட, பிற்காலத்தில் தோன்றக் கூடிய மஹ்தியும் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் நானே என்று அறிவித்தார்கள்.



**ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை)**
வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி

‘பராஹீனே அஹ்மதிய்யா’ பாகம் மூன்றில் இடம் பெற்றுள்ள வாக்களிக்கப்பட்டுள்ள மஸீஹ் தனது இளம் வயதில் கண்ட ஒரு கனவு குறிப்பாக ‘பராஹீனே அஹ்மதிய்யா’ எனும் இந்த நூலைப் பற்றியதாகும்.

கூறுகிறார்கள், அடியேன், 1864 ஆம் ஆண்டு அல்லது 1865 ஆம் ஆண்டு, கல்வி பயின்று கொண்டிருந்த எனது இளமைப் பருவத்தில் ஒரு கனவில் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களைக் கண்டேன். எனது கனவில், நானே எழுதியதாக நான் உணர்ந்த, ஒரு மார்க்கப் புத்தகத்தை என் கையில் வைத்திருந்தேன். அந்தப் புத்தகத்தைப் பார்த்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், என்னிடம், அரபு மொழியில் புத்தகத்திற்கு எவ்வாறு பெயர் சூட்டியுள்ளீர்கள் என வினவினார்கள். அதற்குப் பதிலாக ‘குத்துபி’ எனப் பெயரிட்டுள்ளேன் என்று கூறினேன்.

இந்த பெயர் குறித்த விளக்கம் சான்றுகளையும் பகுத்தறிவு வாதங்களையும் தன்னகத்தே கொண்டு உறுதியான மறுக்க முடியாத துருவநட்சத்திரம் போன்று விளங்கும் பராஹீனே அஹ்மதிய்யா எனும் இந்நூலை மிகப் பரந்த விளம்பரத்துடன் வெளியிடும் இந்த நேரத்தில் என் மனதில் நினைவிற்கு வருகின்றது.




இந்தப் புத்தகத்தில் உறுதியான கருத்துகளை எடுத்து வைத்துள்ள நான், இந்நூலின் கருத்துகளை தவறு என்று நிரூபிப்பவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் வெகுமதி என்ற அறிவிப்புடன் ஓர் அறைகூவலையும் வைத்துள்ளேன்.

அக்கனவில், சுருங்கக்கூறின், சிறிது நேரத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் இருந்து அந்தப் புத்தகத்தை வாங்கினார்கள். அவர்களது அருளுக்குரிய கைகள் அந்தப் புத்தகத்தின் மீது பட்ட மாத்திரத்தில் அது ஓர் அழகான விரும்பத்தக்க வகையிலான, தர்பூசணிப் பழத்தின் அளவிலான ஒரு கொய்யாப்பழம் போல மாறியது. அப்பழத்தைப் பகிர்ந்தளிக்கும் வகையில் அதை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் துண்டுகளாக வெட்ட ஆரம்பித்தபோது அப்பழத்திலிருந்து அதிக அளவு தேன் வடிந்தது. எந்த அளவுக்கெனில் அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கை மற்றும் முழங்கையிலிருந்து சொட்ட தொடங்கியது.

பிறகு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஓர் அற்புதம் என கருதும் படியாக கதவுக்கு வெளியே கிடந்த ஒரு சடலம் உயிர் பெற்று எழுந்து என் பின்னால் வந்து நின்றது. ஓர் அரசரின் முன் பணிவுடன் வேண்டி நிற்கும் ஒருவரைப் போல நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்பு நான் நின்று கொண்டு இருந்தேன். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகுந்த மகிமையுடனும் மாட்சிமையுடனும் தமது அதிகாரம் வெளிப்படும் வகையில் ஒரு பெரிய வெற்றி வீரரைப் போல ஓர் ஆசனத்தில் வீற்றிருந்தார்கள்.

இறுதியாக, சுருங்கக்கூறின் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தற்போது புத்துயிர் பெற்ற நபரிடம் கொடுக்கும் படியாக பழத்தின் ஒரு துண்டை என்னிடம் கொடுத்தார்கள். மேலும் மீதமுள்ள துண்டுகளையும் என்னிடமே கொடுத்து விட்டார்கள். நான் அந்த ஒரு துண்டை அந்த புத்துயிர் பெற்ற நபரிடம் கொடுத்தேன். அவர் அதை உடனே உண்டு விட்டார். அவர் உண்டு முடித்தவுடன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீற்றிருந்த ஆசனம் வெகு உயரத்துக்கு உயர்ந்தது. மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக. அவர்களின் வாகனம் சூரிய கதிர்களைப் போல பிரகாசிக்க ஆரம்பித்தது. இந்த ஒளியின் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே நான் விழித்துக் கொண்டேன் (எல்லாப் புகழும் இறைவனுக்கே). (பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 3, ரூஹானி கஸாயின் தொகுதி 1, பக்கம் 274-276. அடிக்குறிப்பு எண் 1. மேலும் பார்க்க தத்கிரா ஆங்கிலப் பதிப்பு பக்கம் 5-6)

வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஐந்தாவது கலீ்.பா என்ற வகையில் நடுநிலையாளர்கள் அனைவருக்கும் எனது அறைகூவல் யாதெனில் பராஹீனே அஹ்மதிய்யா எனும் இந்நூலை அக்கறையுடனும், கவனத்துடனும் படிக்க வேண்டும் என்றும் அதிற்கண்டுள்ள செய்தி உண்மை மற்றும் நேர்மையின்பால் உள்ளது என்பதை அறியும் பட்சத்தில் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே ஆகும்.

தங்களது மார்க்கக் கோட்பாடுகளை தற்காத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணுபவர்கள், நியாயம் மற்றும் கண்ணியமான சட்டதிட்டங்களை மேற்கொண்டபடி தங்கள் தரப்பு விவாதங்களை தங்களின் மார்க்க வேதங்களின் அடிப்படையில் எழுதலாம். மேலும் அனைத்து நல்ல முஸ்லிம்களையும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்,

فَإِذَا رَأَيْتُمُوهُ فَبَايِعُوهُ وَلَوْ حَبْوًا عَلَى الثَّلْجِ فَإِنَّهُ خَلِيفَةُ اللهِ الْمَهْدِيُّ

“நீங்கள் மஹ்தியைச் சந்திக்க நேர்ந்தால் அவர்களது கைகளில் பைஅத் செய்யுங்கள். பனிமலையின் மீது தவழ்ந்து செல்ல நேரிட்டாலும் நீங்கள் அவரை அடைந்து விட வேண்டும். அவரே இறைவனின் கலீ்.பா ஆவார். அவரே மஹ்தியும் ஆவார்” எனும் போதனைக்கு செவிசாய்க்குமாறு அழைப்பு விடுக்கிறேன்.

அல்லாஹ்வின் கலீ்.பா ஆகிய மஹ்தி (அலை) அவர்களை அறிந்து கொண்ட பாக்கியத்தைப் பெற்ற அஹ்மதி முஸ்லிம்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் புத்தகங்களை தாமும் படிக்க வேண்டும். மேலும் தங்கள் குழந்தைகளுக்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூற்களைப் படித்து வரும் பழக்கத்தைக் கற்றுத் தர வேண்டும் என்பதே அனைத்து அஹ்மதி முஸ்லிம் -களுக்கும் எனது நினைவூட்டல் ஆகும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூற்களில், ஈமானை நிலைநிறுத்தவும் அதனை வளர்த்துக் கொள்ளவும் தேவையான ஆன்மீக வாழ்வளிக்கும் ஆன்மீக தண்ணீரை நீங்கள் காண்பீர்கள்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “மஸீஹ் ஆகிய இயேசு கிறிஸ்துவினால் உயிர்த்தெழுந்தவர்கள் மரணித்து விட்டனர். ஆனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள கோப்பையில் இருந்து அருந்துபவர் ஒருபோதும் மரணிப்பது இல்லை. நான் கூறக்கூடிய வாழ்வளிக்கும் வார்த்தைகளை கூறக் கூடியவர்கள் மேலும் என் போல ஞானத்தை வெளிப்படுத்துபவராக யாரேனும் மற்றவர் ஒருவர் இருப்பின் நான் இறைவன் புறத்திலிருந்து வரவில்லை என்று நீங்கள் முடிவு செய்யலாம். ஆனால், மரணித்து விட்ட உள்ளங்களுக்கு வாழ்வளிக்கக் கூடிய

ஆன்மீக தண்ணீராக விளங்கும் இந்த ஞானத்தையும், அறிவையும் வேறு எங்குமே பெற்றுக் கொள்ள முடியாதபோது விண்ணிலிருந்து திறக்கப்பட்டுள்ள நீரூற்றினை நிராகரித்த குற்றத்திற்கு உங்களிடம் எந்த சாக்குப் போக்கும் இல்லை.”

ஏற்கனவே, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் 30-க்கும் மேற்பட்ட புத்தகங்கள் ஆங்கில மொழிபெயர்ப்பில் வெளியிடப்பட்டுள்ள நிலையில் வெளியீட்டுப் பணிகள் தொடர்கின்றன. இந்த வகையில் பராஹீனே அஹ்மதிய்யா ஆங்கில மொழிபெயர்ப்பின் வெளியீடு ஒரு மைல் கல் ஆகும். ஏனெனில் இப்புத்தகம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தலைசிறந்த புத்தகம் ஆகும். பிற்காலத்தில் அதிகப்படியாக விளக்கங்களைப் பொதிந்துள்ள பிற புத்தகங்கள் வெளி வருவதற்கு முன்னர் அவைகளுக்கென அடிப்படைக் கோட்பாடுகளை அறிந்த்து கொள்வததற்கு பராஹீனே அஹ்மதிய்யா எனும் இந்நூல் அடித்தளமிட்டது.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், அல்லாஹ்விடமிருந்து, அன்னாரின் தூதுச் செய்தியினை ‘உலகின் கடைசி எல்லை வரை எடுத்துச் செல்வேன்’ எனும் செய்தியை, இறைஅறிவிப்பின் மூலம் பெற்றுள்ளார்கள். அன்னாரது வாழ்நாளிலேயே அன்னாரது செய்தி உலகெங்கும் பரவுவதற்கான வசதிகள் தோன்ற ஆரம்பித்து விட்டிருந்தன.



அன்னார் கூறுகின்றார்கள்: ‘புத்தகங்கள் பரவலாக விரிக்கப்படும் பொழுது’ எனும் இச்சொற்றொடர் புத்தகங்கள் வெளியீட்டுக்குப் பயன் தரக்கூடிய அச்சு இயந்திரங்களையே குறிக்கின்றன. தாங்கள் காண்பது போல் புத்தகங்கள் அச்சிடக்கூடிய உபகரணங்கள் கண்டுபிடிக்கக் கூடிய ஒரு சமூகத்தை அல்லாஹ் எழுப்பி உள்ளான். இந்தியாவிலும் பிற உலக நாடுகளிலும் எத்தனை அச்சு இயந்திரங்கள் பணியில் உள்ளன! இது, எனக்கு, என் பணியில் உறுதுணையாக நின்று, எனது போதனைகளையும் என் புத்தகங்களையும் உலகில் பரவச் செய்து, மக்கள் அவற்றிற்கு செவிசாய்க்க -வும், அதன்படி வழிநடத்தப்படவும் செய்வதற்கான இறைவனின் செயலாக இருக்கிறது.

எல்லாம் வல்ல இறைவனின் அருளால், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், வேகமாக வளரக்கூடிய அச்சு மற்றும் புத்தக வெளியீடு சார்ந்த அறிவியல் முன்னேற்றங்களைப் பயன்படுத்திக் கொள்வதில் முனைப்புடன் தொடர்கிறது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தியானது, உலகம் முழுவதும் 200 நாடுகளுக்கு மேல் MTA (முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா) மூலம் கொண்டு செல்லப்படுகிறது. மேலும், வலைத்தளங்களில் நமது இருப்பானது ஒரு தீர்க்கமான இஸ்லாமிய போதனைகள் மற்றும் இஸ்லாம் அஹ்மதிய்யா பற்றிய அறிவார்ந்த விஷயங்களை உள்ளடக்கி உள்ளது. உலகெங்கும் பல நாடுகளில் பணியாற்றும் அஹ்மதிய்யா தன்னார்வலர்களின் மத்தியில் ஒரு ஒருங்கிணைப்பையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்தும் பொருட்டும், பல்வேறு மூல நூல்களில் இருந்து கருத்துகளைப் பெறவும், பணிகளை துரிதப்படுத்துவதற்கும் ஏதுவாக மின் அணுவியல் சார்ந்த ஊடகங்கள் இருப்பதால், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் அசல் நூல்களின் மொழியாக்கப் பணி வேகம் பெற்றுள்ளது

மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத்
ஐந்தாவது கலீ்ஃபத்துல் மஸீஹ்
(ஜுன் 11, 2012) .

(தொடரும்...)



## ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நூல்களிலிருந்து எஸ்ஸென்ஸ் ஆ.ஃப் இஸ்லாம்

7

தொகுதி 1

# தூய நபி முஹம்மத் (ஸல்) அவர்கள்

அதிகாரம் 3

**தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மத்**

### தூய நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர்கள் மீதான அல்லாஹ்வின் அருள்கள்

ஆன்மீக வாழ்வின் உண்மையான சான்று, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய புனிதமான வாழ்க்கையிலேயே வெளிப்படுகிறது. நன்மையற்ற வாழ்க்கை, வாழ்க்கையன்று. அருளற்ற வாழ்வு, இருப்பினும் பயனற்றதே. உண்மையில் புகழத்தக்க வாழ்வுகள் இரண்டே உள்ளன.

ஒன்று எல்லா நன்மைகளுக்கும் மூலமாகிய, எப்பொழுதும் உயிரோடிருக்கின்ற, சுயமாக நிலைத்திருக்கின்ற இறைவனுடைய வாழ்க்கையாகும்.

மற்றொன்று பிறருக்கு பயன் அளித்து, மக்களை இறைவனை நோக்கி வழிநடத்தும் வாழ்க்கையாகும்.

இவ்வாறான வாழ்க்கை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையே ஆகும் என்பதற்கு வரலாற்றின் ஒவ்வொரு காலத்திலும் வானம் சாட்சி கூறியுள்ளது. மேலும் இன்றும் சாட்சி கூறுகின்றது.....

ஒருவன், பிறருக்கு நன்மை தராத வாழ்வை நடத்தினால், அவன் உயிரோடிருப்பவன் அல்ல. அவன் உண்மையில் இறந்தவனே ஆவான். நான் அல்லாஹ்வைச் சாட்சியாகக் கொண்டு அறிவிக்கிறேன்: நமது எஜமானர், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுடைய நிலையான வாழ்வின் சான்றையும், அவர்களுடைய முழுமையான மகிமையையும், நிறைவான பண்பையும் அல்லாஹ் எனக்கு வெளிப்படுத்தியுள்ளான்.

அன்னாருக்கு கீழ்ப்படிந்து, அவர்களை நேசித்ததின் மூலம், விண்ணிலிருந்து இறங்கும் அடையாளங்களை நான் கண்டேன். என் இதயம் உறுதியின் ஒளியால் நிரம்பியது. எண்ணற்ற இறைஅடையாளங்களை நான் கண்டு அனுபவித்தேன். அவற்றின் வெளிப்படும் ஒளியால், என் இறைவனை நான் நேரடியாகக் கண்டேன். (திரியாக்குல் குலூப், ருஹானீ கஸாயின், தொகுதி 15, பக்கம் 139-140)

நம்முடைய திருநபி முஹம்மது முஸ்த.ஃபா (ஸல்) அவர்களின் மகத்துவத்தைப் பாருங்கள். அவர்கள் எவ்வளவு தாழ்மையும் அடக்கமும் கொண்டவராகத் திகழ்ந்தார்களோ, அதே அளவில் அல்லாஹ்வின் பரிசுத்த ஆவியின் ஒளியால் நிறைந்து, இறை உதவியால் ஒளியூட்டப்பட்டவராகக் காணப்பட்டார்கள். அவர்களது செயல்களும் நடத்தைகளும் இதற்கு சான்றாகும்.




அன்னாரது ஒளியும் அருட்கொடைகளையும் கொண்ட வட்டம் பரந்ததும் விரிவானதுமாகும். அதன் பிரதிபலிப்பு காலந்தோறும், நிரந்தரமாகத் தென்படுகிறது. இக்காலத்திலும் இறங்கி வரும் அல்லாஹ்வின் அருளும் கருணையும், அன்னாரை பின்பற்றி அவர்களுக்குக் கீழ்ப்படிந்துநடப்பதால் மட்டுமே பெறப்படுகின்றன.

நான் உண்மையைக் கூறுகிறேன்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குத் தன்னையே முழுமையாக அர்ப்பணித்து, அன்னாரது கட்டளைகளுக்கு முற்றிலும் கீழ்ப்படியாமல், எவரும் உண்மையான நல்லடியாராக முடியாது. எவரும் அல்லாஹ்வின் பேரருளையும் அருட்களையும் பெற முடியாது. ஆன்மாவின் மிகுந்த தூய்மையின் உச்ச நிலையில் வழங்கப்படும் அறிவு, உண்மை, ஆன்மீகக் காட்சிகள் இவை அனைத்தும் அன்னாருக்குக் கீழ்படிவதில் தன்னையே இழந்தவருக்கு மட்டுமே வழங்கப்படும்.

இதற்கு இறைவனின் வசனமே சான்றாக உள்ளது

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ

நீர் கூறுவீராக! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்-களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போது) அல்லாஹ்(வும்) உங்களை நேசிப்பான். (3:32)

இந்த இறைவாக்குறுதியின் உயிருள்ள சான்று நான் ஆவேன். அல்லாஹ்வால் நேசிக்கப்படும் அவனது நண்பர்களின் அடையாளங்கள் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளன. அந்த அடையாளங்களின் மூலம் நீங்கள் என்னை அறிந்து கொள்வீர்கள். (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 203-204)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதன் தவிர்க்க முடியாத விளைவு என்னவெனில் அவர்கள் மீதான அன்பு, மரியாதை மற்றும் கீழ்ப்படிதல் ஆகிய மூலக்கொள்கைகளைப் பின்பற்றினால், ஒருவர் இறைவனுடைய நேசனாகி, அவரது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. ஒருவர் பாவத்தின் விஷத்தை உட்கொண்டிருந்தாலும், அந்த விஷம், அன்பு மற்றும் கீழ்ப்படிதல் என்னும் விஷமுறிவினால் பாதிப்பின்றி விடப்படுகின்றது.

எப்படியெனில், மருந்து உட்கொள்வதன் மூலம் ஒரு நோயாளி நோயிலிருந்து மீள்கிறான். அதே போல், பாவம் செய்தவர் பாவத்திலிருந்து தூய்மையாக்கப்படுகிறார். எவ்வாறு ஒளி இருளை நீக்குகிறதோ, விஷ முறிவு விஷத்தின் தாக்கத்தை அழிக்கிறதோ, நெருப்பு சுட்டெரிக்கிறதோ அது போலவே, உண்மையான அன்பும் கீழ்ப்படிதலும் தமது விளைவைக் காட்டுகின்றன. நெருப்பு கணநேரத்தில் எரிப்பது போல, இறைவனுடைய மகிமையை வெளிப்படுத்துவதற்-காகச் செய்யப்படும் நற்செயல்கள் நெருப்பைப் போன்று பாவம் என்னும் எரிபொருளைச் சுட்டெரிக்கின்றன..



ஒருவர், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் உண்மையான நம்பிக்கையுடன், அவர்களின் மகத்துவத்தை ஏற்று, ஆர்வத்தோடு அன்புடனும் கீழ்ப்படிதலுடனும் பின்பற்றுகிறார். மேலும், முழுமையான கீழ்ப்படிதலால் தன்னையே மாய்க்கும் நிலையை அடைகிறார் என்றால் அவர்களுடனான இந்த நெருங்கிய தொடர்பினால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது இறங்கும் இறை ஒளியிலிருந்து அவரும் பங்கு பெறுகிறார்.

பின்னர், எவ்வாறு ஒளி மற்றும் இருள் ஒரே இடத்தில் நிலைத்திருக்க முடியாதவையாக உள்ளனவோ, அவ்வாறே அவருடைய அக இருள் மெல்ல நீங்கத் தொடங்குகிறது. இதன் பின், அது முற்றிலும் அழிகிறது. அவர் அந்த ஒளியால் வலுப்பெற்று, உயர்ந்த தரமான நற்கருமங்களைச் செய்கிறார். அவருடைய உடம்பின் ஒவ்வொரு அங்கத்திலும் இறைவன் மீதான அன்பின் ஒளி ஒளிர்கிறது.

அவரது அக இருள் முழுவதும் நீங்கி, அவர் அறிவிலும் நடத்தையிலும் ஒளியை அனுபவிக்கிறார். இந்த ஒளிகளின் சங்கமத்தால், அவரது உள்ளத்திலிருந்து பாவத்தின் இருள் விலகுகிறது. நிச்சயமாக, ஒளியும் இருளும் ஒன்றாக நிலைத்திருக்க முடியாதவையே! அதுபோலவே, ஈமான் என்னும் ஒளியும், பாவம் என்னும் இருளும் ஒரே இடத்தில் தங்க முடியாது.

அப்படிப்பட்ட நபர் எப்பொழுதும் எந்தப் பாவத்திற்கும் உட்படவில்லை என்றால், அவருடைய பாவம் செய்வதற்கான ஆற்றல் முற்றிலும் அமுக்கப்பட்டு விடுகிறது. அப்பொழுது அவர் நற்செயல்களுக்கு ஆர்வத்துடன் முனைந்து விடுகிறார். இது குறித்தே அல்லாஹ் திருக்குர்ஆனில் அறிவிக்கிறான்:

وَزَيَّنَهٗ فِىْ قُلُوْبِكُمْ وَكَرَّهَ اِلَيْكُمُ الْكُفْرَ وَالْفُسُوْقَ وَالْعِصْيَانَ

அல்லாஹ் நம்பிக்கையை உங்களுக்கு விருப்பமான-தாகவும் அதனை உங்கள் உள்ளங்களுக்கு அழகு வாய்ந்ததாகவும் ஆக்கியுள்ளான். மேலும் அவன் நிராகரிப்பையும் கொடுமையையும் கீழ்படியாமையையும் உங்களுக்கு வெறுப்பானவையாக ஆக்கியுள்ளான். (49:8)
(ரிவியூ ஆஃப் ரிலீஜியன் உர்து, தொகுதி 1, எண் 5, பக்கம் 194-195)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முழுமையான கீழ்ப்படிதலின்றி ஒருவர் இறைவனால் நேசிக்கப்படுகிற நிலையையோ, அவனது நண்பனாக ஏற்றுக் கொள்ளப்படுகிற நிலையையோ எதற்கான அடையாளங்கள் சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளனவோ அவற்றை அடைவது, சாத்தியமல்ல.

இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான சான்றுகளையும் அடையாளங்களையும் வெளிப்படுத்தும் விஷயத்தில் ஒரு கிறிஸ்துவரோ, ஆரிய சமாஜியோ அல்லது யூதரோ, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை உண்மையுடன் பின்பற்றும் முஸ்லிமுக்கு எதிராக நிற்க இயலாது. இதனை உணர்து கொள்ள ஒரு தெளிவான வழி உண்டு.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை உண்மையுடன் பின்பற்றும் ஒரு பற்றுமிக்க முஸ்லிமுக்கெதிராக, எந்த கிறிஸ்துவரும் அல்லது பிற எதிரியும் வந்து நிற்க முடியாது. அவர்கள், விண்ணிலிருந்து முஸ்லிமுக்காக வெளிப்படும் அதே வகையான அடையாளங்களைத் தாங்களும் காட்டுவோம் என்று கூற முடியாது. அல்லது அவரால் முன்வைக்கப்படும் மறைமுகமான இரகசியங்களைத்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

# கிலாஃபத்தின் நிழலின் கீழ் பரஸ்பர அனுதாபம் மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றின் முக்கியத்துவமும் நமது பொறுப்பும்



**மதிப்பிற்குரிய டாக்டர் சர் இஃப்திகார் அஹ்மத் அயாஸ் சாஹிப்**
(Chairman, International Human Rights Committee, UK)

**தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மத்**

*(சென்ற இதழின் தொடர்ச்சி ...)*

இப்போது சம்பவங்களின் ஒளியில் கிலா∴பத்தின் நிழலின் கீழ் பரஸ்பர அனுதாபம் மற்றும் சகோதரத்துவத்தின் சில காட்சிகளைக் காண்போம்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

“இறைவன் என்னை நிறுத்தியுள்ள இந்த அந்தஸ்தில் நான் இருப்பதன் காரணமாக, மக்களுக்காக என் உள்ளத்தில் எவ்வாறான கலப்பற்ற தன்மையும் நேசமும் உள்ளது என்றால், நான் என் உள்ளத்தில் எவ்வாறான அனுதாபத்தை -யும் கருணையையும் காண்கிறேன் என்றால், அந்த அளவுக்கு ஒரு தந்தைக்கு தன் மகனைக் குறித்து இருக்க முடியாது. ஒரு மகனுக்கு தன் தந்தையைக் குறித்து இருக்க முடியாது. இதை என்னால் நேர்மையுடன் கூற முடியும்.” (அல்∴பஸ்ல், ஏப்ரல் 14, 1924, பக்கம் 7)



ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் பாகிஸ்தானிலிருந்து இலண்டனுக்கு ஹிஜ்ரத் செய்வதற்கு ஒரு நாள் முன்பு, அதாவது ஏப்ரல் 28, 1984 அன்று, ரப்வாவிலுள்ள மஸ்ஜித் முபாரக்கில் ஒரு தொழுகைக்குப் பிறகு ஜமாஅத் அன்பர்களிடம் உரையாற்றியவாறு இவ்வாறு கூறினார்கள்:

“அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ்! நான் ஏதேனும் ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக உங்களை இங்கு உட்கார வைக்கவில்லை. நான் உங்களைப் பார்க்க வேண்டும் என்பதற்காக உங்களை உட்கார வைத்தேன். உங்களைப் பார்ப்பதால் என் கண்கள் குளிர்ச்சி அடைகின்றன. என் உள்ளம் நிம்மதி பெறுகிறது. நான் உங்களை நேசிக்கிறேன்; அன்பு செலுத்துகிறேன். இறைவன் மீது ஆணையாக! எந்தத் தாய்க்கும் இவ்வளவு அன்பு இருக்க முடியாது.” (காலித் எனும் மாத இதழ், ஸய்யிதினா தாஹிர் நம்பர் 2004, பக்கம் 36)

“உண்மைதான்! மஸீஹ் ஒரு நோயாளியிடம் தானாகவே வருகிறார் என்றால், இந்த அன்பு நற்பேறு பெற்றவர்களுக்கே கிடைக்கிறது. உள்ளம் எனும் பாத்திரம் இவ்வாறே தரிசனத்தால் நிரம்பிக் கொண்டிருக்கட்டும். இவ்வாறே, இறைவன் எங்களை எஜமானருக்கு அருகில் கொண்டு வந்து கொண்டிருப்பானாக!”

நமது அன்பிற்குரிய எஜமானர், நமது இமாம் ஹஸ்ரத் அமீருல் மு∴மினீன் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் அன்பு, பரிவின் சில சம்பவங்களைக் கேட்போம்.

உமர்கோட் மாவட்டம் குன்ரி எனும் ஊரைச் சார்ந்த மதிப்பிற்குரிய முஹம்மத் இக்பால் சாஹிப் கூறுகிறார்: இந்த எளியவனின் மகன் மஹ்மூத் அஹ்மத் அன்ஜும், ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவில் படித்துக் கொண்டிருந்தார். படிப்பில் பலவீனமாக இருந்தார். ஒருமுறை நான் என் மகனை அழைத்துக் கொண்டு மதிப்பிற்குரிய நாஸிர் சாஹிப் அ∴லா அவர்களின் அலுவலகத்தில் மியா(ன்) சாஹிப் (அதாவது, ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ்) அவர்களிடம் சென்றேன். மேலும் அன்னாரிடம், (என் மகன்) வாழ்வை அர்ப்பணித்தவனாக உள்ளான். இவனே தன் வாழ்வை அர்ப்பணித்துள்ளான். இவன் படிப்பில் பலவீனமாக இருக்கிறான். தாங்கள் இவனுக்கு புரிய வையுங்கள். இவனுக்காக துஆ செய்யுங்கள். நான் இந்த பிள்ளையை தங்களிடம் ஒப்படைக்கிறேன். தாங்கள் இவனது படிப்பை கண்காணிக்க வேண்டும். இது எனக்கு ஒரு பேருபகாரமாக இருக்கும் என்றேன். அதற்கு அன்னார், என் மகனைப் பார்த்து, இனிமேல் நீங்கள் என்னைச் சந்தித்து வர வேண்டும். ஒவ்வொரு மாதமும் உங்கள் கல்வி அறிக்கையை எனக்கு கொடுக்க வேண்டும் என்று கூறினார்கள். இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு நான் மீண்டும் ரப்வா சென்றபோது என் மகனிடம், நீங்கள் மியா(ன்) சாஹிபைச் சந்திக்கும்போது மியா(ன்) சாஹிப் என்ன கூறுவார்கள் என்று கேட்டேன். அதற்கு என் மகன், தினமும் குறைந்தது இரண்டு ந∴பில் தொழுகைகள் தொழ வேண்டும் என்றும், உறங்குவதற்கு முன் ரூஹானீ கஸாயினைப் படிக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு மாதமும் முயற்சி செய்து எனது கைச்செலவு பணத்திலிருந்து ஒரு புத்தகம் வாங்க வேண்டும் என்றும் மியா(ன்) சாஹிப் கூறினார்கள் என்றான்.

2003 ஆம் ஆண்டு பிரிட்டன் ஆண்டு மாநாட்டில் இந்த எளியவனுக்கு கலந்து கொள்ளக் கூடிய நல்வாய்ப்பு கிடைத்தது. நான் தொழுகைக்காக மஸ்ஜித் ∴பஸ்ல் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது வழியில் ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவின் பிரின்சிபல் ஆகிய மதிப்பிற்குரிய சையித் மீர் மஹ்மூத் அஹ்மத் சாஹிப் அவர்களைச்

சந்தித்தேன். நான் சலாம் கூறி கைகுலுக்கி கட்டித் தழுவினேன். அப்போது அவர்கள் என்னிடம், தங்களுடைய மகன் மஹ்மூத் அஹ்மத் அன்ஜும் மிகவும் அதிர்ஷ்டசாலி ஆவார். கிலா∴பத்திற்கு முன் நம் அன்பிற்குரிய எஜமானர், அவரைக் கண்காணித்து வந்தார்கள். என்னிடம் (அவரைக் குறித்து) அறிக்கை பெற்று வந்தார்கள். அவர் அல்லாஹ்வின் அருளாலும், ஹுஃஸூர் அவர்களின் துஆக்களாலும் ஜாமிஆவில் தேர்ச்சி பெற்று வந்தார் என்று கூறினார்கள்.

நானும் என் மகனும் எவ்வளவு நற்பேறு பெற்றவர்கள்! கிலா∴பத்திற்கு முன்னும் பின்னும் அன்பிற்குரிய எஜமானரின் துஆக்கள் எங்களுடன் உள்ளன. அல்லாஹ் தனது அருளால் ஹுஃஸூர் அவர்களுக்கு ஆரோக்கியமான நீண்ட ஆயுளை வழங்குவானாக. (தஷ்கீஃஸுல் அஸ்ஹான் எனும் மாத இதழ், சய்யிதுனா மஸ்ரூர் நம்பர் 2008, பக்கம் 37-38)

2013 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா -வின் ஆண்டு மாநாட்டிற்கு அடுத்த நாள் ஹுஃஸூர் அவர்கள் ளுஹர் மற்றும் அஸ்ர் தொழுகைகளை முடித்து விட்டு தமது தங்கும் இடத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென ஓர் அஹ்மதி ஹுஃஸூர் அவர்களின் முன் வந்து, ஹுஃஸூர்! தன் மகனுக்கு 'ஆமீன்' நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்று வேண்டினார். ஹுஃஸூர் அவர்கள் பரிவுடன் அந்த அஹ்மதியின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு, இன்று மாலை நடைபெறவிருக்கும் 'ஆமீன்' நிகழ்ச்சியில் உங்கள் மகனையும் அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள். அதற்கு அந்த அஹ்மதி, ஹுஃஸூர்! இன்று மாலை நான் திரும்பிச் செல்கிறேன். விமான நிலையம் செல்ல மாலை 6.00 மணிக்கு புறப்பட வேண்டும் என்று கூறினார். ஹுஃஸூர் அவர்களுடன் இருந்த பாதுகாப்பு ஊழியர்களும் இதர ஊழியர்களும் இவ்வாறான வேண்டுகோளைக் கேட்டு திகைத்து விட்டனர். ஹுஃஸூர் அவர்கள் அந்த அஹ்மதியின் வேண்டுகோளை அமைதியாகக் கேட்டார்கள். உங்கள் மகனை அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள். ஹுஃஸூர் அவர்கள் வீட்டிற்குச் சென்று சில நிமிடங்களுக்குப் பிறகு திரும்பி வந்து, தமது தங்குமிடத்திற்கு முன்னால் அந்த பிள்ளையின் 'ஆமீன்' நிகழ்ச்சியை நடத்தினார்கள். ஹுஃஸூர் அவர்கள் தமது பிஸியான நேரத்திலும், அந்த அஹ்மதியின் மீது கொண்ட அனுதாபத்தின் காரணமாகவும், அவரது உணர்வுகளை மதித்தும், ஏற்கனவே திட்டமிடப்பட்ட கூட்டு 'ஆமீன்' நிகழ்ச்சிக்கு முன்னதாக, அப்போதே அந்த குழந்தையின் தனிப்பட்ட 'ஆமீன்' நிகழ்ச்சியை நடத்தினார்கள். (2015 காதியான் ஆண்டு மாநாட்டின் மூன்றாம் நாள் உரை, பேச்சாளர்: ஷீராஸ் அஹ்மத் சாஹிப்)




மொராக்கோவைச் சேர்ந்த ஒரு கலப்பற்ற அஹ்மதி கூறுகிறார்: நான் இரண்டாவது முறையாக 2006 ஆம் ஆண்டு ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுஃல்லாஹ்) அவர்களைச் சந்தித்தபோது, ஹுஃஸூர் அவர்கள் (என்னிடம்), நான் 2005 ஆம் ஆண்டு ஸ்பெயினுக்குச் சென்றபோது, ஜிப்ரால்டர் (Gibraltar) மலைகளைப் பார்வையிடும்போது அங்கிருந்த எனது மொராக்கோ அஹ்மதி சகோதரர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் கூறினேன் என்றார்கள்.

என் சகோதரர்களே! ஜிப்ரால்டர் மலைகளைப் சுற்றி பார்ப்பவர்களில் சிலர் பரந்த கடலைப் விவரிக்கிறார்கள் என்றால், சிலர் அந்த மலைகளின் அழகையும் உள்ளம் கவரும் காட்சியைப் பற்றியும் பேசுவார்கள். சிலரோ அங்குள்ள இயற்கையின் அழகையும், மனதைக் கவரும் காட்சிகளையும் பற்றிப் பேசுவார்கள். ஆனால் சற்று சிந்தித்துப் பாருங்கள்! ஜிப்ரால்டர் மலைகளிலிருந்து எனது எஜமானரின் பார்வை மொராக்கோவின் நகரங்கள் மற்றும் குடியேற்றங்கள் மீது பட்டபோது, அன்னாருக்கு அங்கு வாழும் காதிம்கள் நினைவுக்கு வந்தார்கள். அவர்களின் நேசம் எந்த அளவு அதிகமாகப் பொங்கி வழிந்தது என்றால், தன்னிச்சையாக அன்னாருடைய உள்ளத்திலிருந்து அவர்களுக்காக சாந்தி சமாதானத்தின் துஆக்கள் வெளிவரத் தொடங்கின. (2011 ஜெர்மனியின் ஆண்டு மாநாட்டுச் சொற்பொழிவு, பேச்சாளர்: முனீர் அஹ்மத் ஜாவீத் சாஹிப், ஹுஃஸூர் அவர்களின் பிரைவேட் செக்ரட்டரி)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுஃல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: "அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்கள்தான் நற்பேறு பெற்றவர்கள் ஆவர்! ஏனென்றால் அவர்களைப் பற்றி காலத்தின் கலீ∴பாவுக்கு அக்கறை உள்ளது. உலகில் பரவியுள்ள அஹ்மதி -களின் எந்த ஒரு பிரச்சினையும், அது தனிப்பட்டதாக இருந்தாலும் சரி அல்லது ஜமாஅத் சார்ந்ததாக இருந்தாலும் சரி! காலத்தின் கலீ∴பாவின் கவனத்திற்கு வராமல் அது இருப்பதில்லை. மேலும், அதன் தீர்வுக்காக அவர் செயல்முறை முயற்சிகளை மேற்கொள்வதுடன் அல்லாஹ்வின் முன்னிலையில் குனிந்து அவனிடம் துஆ கேட்காமல் இருப்பதில்லை. இரவில் உறங்குவதற்கு முன் என் சிந்தனையோட்டத்தின் மூலம் நான் சென்றடையாத எந்தவொரு நாடும் இல்லை. உறங்கும்போதும் விழித்திருக்கும் போதும் அவர்களுக்காக துஆ செய்யாமல் இருந்ததில்லை." (அல் ∴பஸ்ல் நாளிதழ், ஆகஸ்டு 1, 2014)

முஸ்லிம் சமுதாயத்தின் தற்போதைய நிலையை மேலோட்டமாகப் பார்த்தால், அது அசாதாரணமான வேறுபாடுகளையும், பிரிவினைக்கும் ஆளாகியுள்ளதை பார்வையுள்ள ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளலாம். ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் ஒருங்கிணைதலின் இந்த குறைபாடு காரணமாக, அவர்களின் பெரும்பான்மையினர் ஏழ்மை மற்றும் வறுமையில் வாடுவது மட்டுமல்லாமல் அவர்களிடையே மன ரீதியான, அறிவுசார் பின்தங்கிய நிலையும் உச்சத்தில் இருப்பதையும் காணலாம்.

அவர்களுக்கு முன்னால் எந்த நோக்கமும் இல்லை. எந்த ஒருங்கிணைந்த செயல் திட்டமும் இல்லை. அதே சமயம் அவர்களின் உள்ளங்கள் பிரிந்து கிடக்கின்றன. திருக்குர்ஆன் அவர்களின் இந்த நிலையை படம்பிடித்து காட்டியவாறு கூறுகிறது:

تَحۡسَبُهُمۡ جَمِيۡعًا وَّقُلُوۡبُهُمۡ شَتّٰى "நீர் அவர்களை ஒன்றுபட்டிருப்ப-தாகக் கருதுகிறீர். ஆனால் அவர்களின் உள்ளங்கள் சிதறிக் கிடக்கின்றன." (சூரா அல்ஹஷ்ர்: 15)

ஆகவே, நம்பிக்கை கொண்டோரின் ஜமாஅத்தை ஒற்றுமையின் சரடில் கோர்த்து அவர்களை ஒருங்கிணைப்பது அல்லாஹ்வின் கயிறான கிலா.ஃபத்தே ஆகும். ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டின் இந்த அருளால் ஜமாஅத், எல்லா திசைகளிலும் நிகரற்ற வளர்ச்சியை பெறுகிறது. அதாவது, கிலா.ஃபத்துதான் வெற்றி மற்றும் முன்னேற்றத்தின் உண்மையான திறவுகோல் ஆகும். இதன் மூலம்,

وَلَيُمَكِّنَنَّ لَهُمۡ دِيۡنَهُمُ الَّذِى ارۡتَضٰى لَهُمۡ அதாவது, அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்காக உறுதிப்படுத்துவான் என்ற காட்சி தென்படுகிறது. (சூரா அன்நூர்: 56)

அஹ்மதிய்யா ஜமாஅத்துதான் கிலா.ஃபத் எனும் ஒரு மகத்தான அருலிருந்து பயன்பெறும் நற்பேறு பெற்ற ஜமாஅத் ஆகும். மேலும், இந்த அருளின் நிழலில் வளர்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. ஏனெனில், சமுதாயங்களின் வளர்ச்சியும் அவற்றின் அனைத்து முன்னேற்றங்களின் இரகசியமும் சகோதரத்துவம், ஒற்றுமை ஒருமைப்பாடு, நேசம் பாசம், பரஸ்பர அனுதாபம், அன்பு ஆகியவற்றில் மறைந்துள்ளது. இது கிலா.ஃபத் இல்லாமல் சாத்தியமில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மறைவுக்குப் பிறகு அஹ்மதிய்யா கிலா.ஃபத் எனும் அருளுக்குரிய அமைப்பு ஏற்படுத்தப்பட்டது தொடர்பாக விரிவாக எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.ஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மே 24, 2019 அன்று தமது ஜுமுஆ குத்பாவில் கூறுகிறார்கள்:

"அஹ்மதிய்யா கிலா.ஃபத் மூலமாகவே உலகம் இப்போது ஒரே சமுதாயமாக மாறும் காட்சியைக் காண முடியும். அது இல்லாமல் முடியாது. அஹ்மதிய்யா கிலா.ஃபத்துடன் இந்த உறவும் அன்பும் இருக்கும் வரை அச்சத்தின் நிலையும் அமைதியாக மாறிக் கொண்டிருக்கும். மேலும், மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் வழிவகைகளையும் அல்லாஹ் உருவாக்கிக் கொண்டிருப்பான் - இன்ஷா அல்லாஹ்! கிலா.ஃபத்தின் போதனைகளின்படி செயல்படுவதும் உங்களுக்கு அவசியம் ஆகும். ஏனெனில் இது அல்லாஹ்வின் கட்டளைகளில் ஒரு கட்டளை ஆகும். சமுதாய மற்றும் ஆன்மிக வாழ்வைத் தொடர நம்பிக்கை கொண்டவர்கள் தம் கட்டுப்படுதலின் தரத்தை உயரச் செய்வது மிகவும் அவசியம் ஆகும்.

பைஅத்திற்குப் பிறகு தம் எண்ணங்களை சரியான திசையில் வைத்திருப்பதும், முழுமையான கீழ்ப்படிதலுக்கான முன்னுதாரணங்களைக் காட்டுவதும் மிகவும் அவசியம் ஆகும். பொதுவான கீழ்ப்படிதல் என்பது அல்லாஹ்வுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதும், அவனுக்கான இறைவணக்கங்களை ஒழுங்குபடுத்துவதும் ஆகும். எவ்வாறான உயரிய ஒழுக்கம் கொண்டிருக்க வேண்டும் என்றால், அஹ்மதிக்கும் அஹ்மதியல்லாதவருக்கும் தெளிவான வித்தியாசம் தென்பட வேண்டும். உலக ஆசைகள் மற்றும் அவற்றைப் பின்தொடர்வதன் காரணமாக மார்க்கத்திற்கு இரண்டாம் தர முக்கியத்துவம் கொடுப்பதும் ஒருவகை ஷிர்க் ஆகும். அல்லாஹ்வின் அருளை ஈர்க்க, நம்மிடத்தில் எந்த அளவு கீழ்ப்படிதல் உள்ளது என்று நாம் நம்மைப் பற்றி மதிப்பீடு செய்ய வேண்டிய தேவை உள்ளது. எந்த அளவுக்கு நாம் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்படுகிறோம் என்றும், எந்த அளவுக்கு நாம் நமது வணக்கங்களைச் சீர்செய்கிறோம் என்றும், எந்த அளவுக்கு சுன்னத்தின்படி செயலாற்றுகிறோம் என்றும், எந்த அளவுக்கு நமது கட்டுப்படுதலின் தரம் உள்ளது என்றும் (நாம் நம்மைப் பற்றி சுயமதிப்பீடு செய்ய வேண்டிய தேவை உள்ளது).




வரலாற்றைப் பற்றி ஒவ்வொருவரும் ஓரளவுக்காவது தெரிந்திருக்க வேண்டும்! எவர்கள் கிலா.ஃபத்துடன் இணைந்திருப்பார்களோ, அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைகளின்படி செயல்பட்டு வருவார்களோ, தமது தொழுகைகளைப் பாதுகாப்பார்களோ, தம்மைத் தூய்மைப்-படுத்திக் கொள்வார்களோ, தமது செல்வத்தைத் தூய்மைப்-படுத்துவார்களோ, கட்டுப்படுதலில் உயர்ந்த தரத்தை நிலைநிறுத்துவார்களோ, அவர்கள் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசுதாரர்களாக இருப்பார்கள் - இன்ஷா அல்லாஹ்! (அல் .ஃபஸ்ல் இன்டர்நேஷனல், ஜுன் 10, 2019, பக்கம் 5-9)

(நான் கூறுவதை) பாருங்கள்; கேளுங்கள். அளவற்ற அருளாளன் ஆகிய அல்லாஹ் இன்றும் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.ஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் உருவத்தில் நமக்கு எவ்வாறான ஓர் அன்பான தலைவரை வழங்கியுள்ளான் என்றால், அவர்கள் நம் ஒவ்வொருவரையும் எந்த அளவு நேசத்துடன் அணைத்துக் கொள்கிறார்கள் என்றால், அதனால் துக்கங்கள் மறைந்து, இதயத்தின் அடி ஆழம் வரை மகிழ்ச்சியும் ஆனந்தமும் குடிகொண்டு விடுகின்றன. பேரருள் புரியும் இறைவனுடைய அருள் என்னவென்றால், அவன் நமக்கு எப்படிப்பட்ட ஒரு கலீ.ஃபாவை வழங்கியுள்ளான் என்றால், நேசத்தால் நிறைந்த துஆக்களின் வற்றாத கருவூலமாக அவர்கள் உள்ளார்கள். அவர்களது அன்பான நடத்தை இதயங்களை கவருகிறது. அஹ்மதிய்யத்

உடைய கலீ∴பாக்களின் அன்பு, பரிவு மற்றும் துஆக்கள் ஆகியவற்றின் அருளுக்குரிய இந்த தொடர் எந்த அளவு விரிவானதும், மனம் கவரக் கூடியதும் என்றால், அதைப் பற்றி விளக்க வார்த்தைகள் இல்லை! நாங்கள் அஹ்மதிய்யா கிலா∴பத்தின் நிழலில் எவ்வாறான ஒரு சொர்க்கத்தில் நாட்களை கழித்து கொண்டிருக்கிறோம் என்று என்னால் கூற முடியும் என்றால் நான் உலகிற்குச் (அதைப் பற்றி) சொல்லியிருப்பேன்! அந்தோ (அதைப் பற்றி விளக்க வார்த்தைகள் இல்லையே)! உண்மை என்னவென்றால், இந்த நிலையோ வார்த்தைகளில் விவரிக்கக் கூடியது கிடையாது. மாறாக, சொந்த அனுபவத்தின் ஒளியில் உணரக் கூடியதும், அறியக் கூடியாதுமான ஒரு மாபெரும் செல்வமாகும். இன்று (அஹ்மதிய்யா) ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரும், உலகில் மூலைமுடுக்குகளில் வாழும் கோடிக்கணக்கான அஹ்மதிய்யத்தின் அன்பர்களும் இதற்கு உயிருள்ள சாட்சிகள் ஆவர் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன். (நிஸாமே கிலா∴பத், பக்கம் 74-75)

ஆகவே, இன்று இந்த அருளைப் பாதுகாப்பதற்காக, தம் உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காக உறுதியுடனும் துணிவுடனும் அல்லாஹ்வின் முன் குனிந்தவாறு அவனிடம் உதவி தேடியவாறு களத்தில் குதியுங்கள். ஏனென்றால், அதில்தான் உங்களின் வாழ்வு உள்ளது. அதில்தான் உங்கள் தலைமுறையின் வாழ்வு உள்ளது. அதில்தான் மனிதகுலத்தின் வாழ்வு உள்ளது. நாம் நம்முடைய வாக்குறுதியை நிறைவேற்றுபவர்களாக இருப்பதற்கு அல்லாஹ் உங்களுக்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக. எனக்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக. (மே 27 2008 அன்று ஆற்றிய சொற்பொழிவு)

இறுதியில், கிலா∴பத்தின் நிழலின் கீழ் பரஸ்பர அனுதாபம் மற்றும் சகோதரத்துவத்தை நிலைநிறுத்த அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக என்றும், நம் பொறுப்புகளைச் சிறந்த முறையில் நிறைவேற்ற நமக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக என்றும் துஆ செய்கிறேன்.

*(20-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி ...)*

தாங்களும் வெளிப்படுத்துவோம் என்று கூற முடியாது. அல்லது அவருக்கு நிகழ்வது போலவே, பிரார்த்தனையின் ஏற்றுக் கொள்ளுதலால் வரும் இறைஉதவிகளை வெளிப்படுத்த முடியாது. அல்லது அவருக்காக நிகழும் அதே போன்ற இயற்கை நிகழ்வுகளை தங்களுக்காகக் கூற முடியாது. அல்லது இறைவனுடைய அருளை அறிவிக்கும் முன்னறிவிப்புகளை அறிவிக்க முடியாது. அல்லது எதிரியின் கடுமையான முடிவை எச்சரிக்கும் முன்னறிவிப்புகளைத் தர முடியாது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை உண்மையுடன் பின்பற்றும் முஸ்லிமுக்கு எதிராக இப்படிப்பட்ட முறையில் எவரும் நிற்க மாட்டார்கள். ஏனெனில், அவர்களுடைய உள்ளங்கள் தாமே அதற்கு சாட்சியளிக்கின்றன. அவர்கள் பொய்யர்கள் அவர்கள் உண்மையான இறைவனுடன் எந்தத் தொடர்பும் இல்லாதவர்கள். அந்த இறைவன் தான் நல்லடி-யார்களின் உதவியாளனும், நம்பிக்கைக் கொண்டவர்களின் நண்பனுமாக இருக்கிறான். (தஸ்தீக்குன்-நபி, பக்கம் 45-46 அல்லது மக்தூபாத்தே அஹ்மத், தொகுதி 3, பக்கம் 78-79)

இறைவனுடைய தூதரை நம்புவது, இறைவனின் ஏகத்துவத்தின் மீது நம்பிக்கை கொள்வதற்கான முதல் நிபந்தனையாகும். இவை இரண்டும் பிரிக்கப்பட முடியாதவை.

இறைவனின் ஏகத்துவத்தை நம்புகிறேன் என்று கூறிக்கொண்டு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றாத ஒருவர், சதை இல்லாத உலர்ந்த எலும்பைக் கையில் பிடித்திருப்பவரைப் போன்றவர் அல்லது ஒளி தராத கருமையான விளக்கைத் தாங்கியவனைப் போன்றவர்.

இறைவன் ஒருவனே, அவன் துணையற்றவன் என நம்பிக்கை கொண்டு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாத நிலையில், ஒருவன் இரட்சிக்கப்-படுவான் என்று எவராவது நினைத்தால், அவருடைய இதயம் குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்டது. அவன் குருடனாகி விட்டான். இறைவனின் ஏகத்துவம் என்றால் என்ன என்பதே அவனுக்குத் தெரியாது.

உண்மையில் இத்தகையவனை விட ஷைத்தான் மேலானவன். ஏனெனில், ஷைத்தான் கீழ்ப்படியாதவன் என்றாலும், இறைவன் இருக்கிறான் என்பதை நம்புகிறான். ஆனால் அப்படிப்பட்ட நபருக்கு, இறைவன் மீதான எந்த உண்மையான நம்பிக்கையும் இல்லை.

(ஹகீகத்துல் வஹீ, ரூஹானீ கஸாயின், தொகுதி 22, பக்கம் 122)

(தொடரும்...)

